லை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

ங்கள்: பதினாறு — Valampurii

11 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 17 திங்கட்கிழமை (01.03.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 72

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந்
தர தொழிற்சாலையிலிருந்து
தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

## தான அதிகாரியாக இருக்கும் போது
## ன்சேகா தொடர்புகளை பேணினார்

### ஐ.தே.கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

ரல் சரத் பொன்சேகா கூட்டுப்படை ரதான அதிகாரியாக கடமை ஆற் ப்பத்தில் எதிர்க்கட்சிகளுடன் தொடர் பேணியதாக ஐக்கிய தேசியக் கட்சி ளை மாவட்ட முன்னாள் நாடாளு றுப்பினர் லக்ஸ்மன் செனவிரட்ன துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகா தொடர்பில் தம்மிடம் விசாரணைகள் நடத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்த பாய ராஜபக்ஷ ஆகியோரின் கருத்துகளுக்கு எதிரான கருத்து (16ஆம் பக்கம் பார்க்க)

## அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்டது

### அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். தேர்தல் மாவட்டத்தில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழரசுக்கட்சியில் போட்டியிடும் அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் உறுப்புரிமை நீக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து கடந்த 21 ஆம்திகதி உத்தியோக (16ஆம் பக்கம் பார்க்க)

# பொதுத் தேர்தலின் பின்னர்
# தேசிய அரசமைக்க முயற்சி?

### வென்றாலும் ரணில் பிரதமராம்

(ழும்பு)

ங்கையில் பொதுத் தேர்தலுக்கு பின்னர் தேசிய அரசாங் றது உருவாக்கப்படும் என அரசியல் வட்டாரத் தகவல் ரிவிக்கின்றன. இதன்படி எதிர்க்கட்சியும் ஆளும் கட்சி ணைந்து ஆட்சி அமைக்கும் என கூறப்படுகின்றது. இது பில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாகக் கூறப் (16ஆம் பக்கம் பார்க்க)

## ஏழாவது நாடாளுமன்றத் தேர்தலில் ஒன்பது ஊடகவியலாளர்கள் போட்டி

(கொழும்பு)

விளையாட்டு வீரர்கள் மற்றும் நடிகர்களைத் தவிர ஏழாவது நாடாளுமன்றத்திற்கான இந்தத் தேர்தலில் ஒன்பது ஊடகவியலாளர்களும் குதித்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் இரண்டு சுயாதீனக் குழுக்களில் இவர்கள் போட்டியிடுகிறார்கள்.

மூன்று ஊடகவியலாளர் கொழும்பு மாவட்டத்திலும், இரண்டு ஊடகவியலாளர்கள் யாழ்ப்பாணத்திலும், ஏனையவர்கள் நுவரெலியா, இரத்தினபுரி, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் மாத்தறை (16ஆம் பக்கம் பார்க்க)

### த் தேர்தலின் பின்னர் மாகாண தேர்தல்

(கொழும்பு)

ரும் ஏப்ரல் 8ஆம் திகதி நடை பாதுத் தேர்தலின் பின்னர் வடமா கான தேர்தலை நடத்த நடவடிக் ப் போவதாக ஜனாதிபதி மகிந்த தெரிவித்துள்ளார்.

ஸ் அதிகாரங்களைத்தவிர ஏனைய களை மாகாணங்களுக்கு வழங் தாகவும் காணி அதிகாரங்களை தில் (16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசியத்தினை வலியுறுத்தி புதிய அரசியல் கட்சி யாழில் உதயம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியம், தாயகம், சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி ஒன்று யாழ்ப்பாணத்தில் உதயமாகின்றது.

பிரபல பொருளியல் ஆசிரியர் எஸ்.வரதராஜன் தலைமையிலான இம்முன்னணியில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதன், செல்வராசா கஜேந்திரன் உட்பட பலர் இணைந்துள்ளனர்.

இம்முன்னணிகடந்தவாரம்அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார்பில் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுவதற்கு வேட்புமனுத்தாக்கல் செய்துள்ளது.

இம்முன்னணிவிஷேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நேற்றுமாலை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (16ஆம் பக்கம் பார்க்க)

## ாளர்களுக்கு பாதுகாப்பு வழங்க காப்பு அமைச்சு அனுமதி வழங்கியது

(கொழும்பு)

க பாதுகாப்பு தேவையான வேட் அது தொடர்பில் விண்ணப்பிக்க என பாதுகாப்பு அமைச்சு சுட்டிக் து.

நம் பொதுத் தேர்தலில் போட்டி ாளர்கள் தங்களுக்கு மேலதிக பாதுகாப்பு தேவை என்றால் அது குறித்து அறிவிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. வேட்பாளருக்கு காணப்படும் அச்சுறுத்தல்களின் அடிப்படையில் பாதுகாப்பு வழங்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

உரிய அனுமதி (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனநாயகத்தை நோக்காகக் கொண்டே தமிழர்களின் மாநாட்டில் பங்கேற்றோம்

### பிரித்தானியா அறிவிப்பு

(கொழும்பு)

பிரித்தானிய பிரதமர் கோர்டன் பிரவுண் மற்றும் வெளியுறவு அமைச்சர் டேவிட் மிலிபாண்ட் ஆகியோர் பிரித்தானியாவில் நடைபெற்ற தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டமை தொடர்பில் இலங்கை அரசாங்கம் தவறான கண்ணோட்டத்தை கொண்டுள்ளதாக பிரித்தானிய ஆசிய விவகார பிரதிப்பணிப்பாளர் அன்றூவ் பற்றிக் தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் ஜனநாயகமான பாதைக்காக வலுசேர்க்கும் வகையில் குரல் கொடுக்கும் நோக்கிலேயே (16ஆம் பக்கம் பார்க்க)

## மிழக-யாழ். மீனவர்களுக்கிடையில் டைபெறவிருந்த சந்திப்பு நிறுத்தம்

### இந்திய அரசின் அழுத்தம் காரண ம்!

(யாழ்ப்பாணம்)

ல் நடைபெறும் புனித அந்தோனி ழாவின் போது தமிழக மற்றும் மீனவர்களின் பிரதிநிதிகள் சந் மேற்கொள்ள திட்டமிட்டிருந் அது பின்னர் இந்திய அரசின் ரணமாக கைவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கச்சதீவில் உள்ள புனித அந்தோனியார் திருவிழாவின் போது தமிழக மீனவர்களுக்கும், யாழ்ப்பாண மீனவர்களுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று திட்டமிட்டிருந்தது.

ஆனால் இந்திய அரசின் அழுத்தம் காரணமாக அதுபின்னர் கைவிடப்பட்டுள்ளது. எமக்கு இடையில் உள்ள பல பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கு (16ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவின் மேடையில் மேர்வின் சில்வா பிரசன்னம்

(கொழும்பு)

ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை முன்னிட்டு நேற்று களனியில் நடைபெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் தேர்தல் கூட்டம் ஒன்றில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் அமைச்சரும் வேட்பாளருமான மேர்வின் சில்வா கலந்து கொண்டிருந்தார்.

ஐ.தே.கவின் களனி அமைப்பாளரான பெவன் (16ஆம் பக்கம் பார்க்க)

# பேசும் படம்



எம்மதமும் சம்மதம்...

# லசந்த படுகொலை வழக்கு விசாரணையில் புதிய திருப்பம்

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர், லசந்த விக்ரமதுங்க படுகொலை வழக்கு விசாரணைகளில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது வெளிநாட்டில் உயர் பதவியொன்றை வகித்து வரும் இராணுவ மேஜர் ஜெனரல் ஒருவரிடம் விசாரணை நடத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த படுகொலை சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில் குறித்த மேஜர் ஜெனரலை நாடு திரும்புமாறு புலனாய்வுப் பிரிவினர் உத்தரவிட்டுள்ளனர்.

விசாரணைகள் முடிவடையும் வரையில் குறித்த மேஜர் ஜெனரலை கொழும்பில் தங்கியிருக்குமாறு புலனாய்வுப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

படுகொலை இடம்பெற்ற தினமன்று பயன்படுத்தப்பட்ட ஐந்து தொலைபேசி இலக்கங்களை பரீட்சித்ததன் மூலம் புதிய தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் மலையகத் தோட்டப் புறமொன்றைச் சேர்ந்த தமிழர் ஒருவரின் பெயரில் இந்த தொலைபேசிகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

# அரச சார்பற்ற நிறுவனங்களின் கணக்குகளை ஆராய அரசு தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையில் இருந்து செயற்படும் பிரதான அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு கடந்த காலங்களில் கிடைத்த பெருமளவு பணம் எப்படி செலவு செய்யப்பட்டது என்பதை கண்டறிவது அவசியம் என தெரிவித்துள்ள அரசாங்கம், அது குறித்து அந்நிய செலாவணி விசாரணைகளை நடத்த தீர்மானித்துள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு பல்வேறு செயற்திட்டங்களுக்காக முக்கியமான ஐரோப்பிய நாடுகளிடம் இருந்து அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு 110 மில்லியன் ரூபாய் கிடைத்துள்ளன. இந்த வருடத்தில் மேலும் 69 மில்லியன் ரூபாய் வெளிநாடுகளிடம் இருந்து கிடைத்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவருவதாகவும் அந்த விசாரணைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாகவும் அரசாங்கம் கூறியுள்ளது.

இதேவேளை தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் தொடர்பான புதிய சட்ட மூலமொன்று விரைவில் அமுல்படுத்தப்பட உள்ளதாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு வெளிநாட்டு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தொடர்பில் கண்காணிப்பினை மேற்கொள்ளவும், விசாரணைகளை நடத்தவும் இந்த புதிய சட்ட மூலம் வழிகோலும். தன்னார்வ தொண்டு நிறுவனங்களை கட்டுப்படுத்துவது தொடர்பில் நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழு ஏற்கனவே அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் தேர்தல்களின் பின்னர் குறித்த வரைவுத்திட்ட சட்டமூலம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும், பின்னர் அது சட்டமூலமாக நிறைவேற்றப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் பூரண உரிமையை அரசாங்கத்திற்கு வழங்கும் வகையில் இந்த சட்ட மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த சட்ட மூலம் தொடர்பான பரிந்துரைகளை பெற்றுக் கொள்ளும் நோக்கில் சட்டமா அதிபரிடம் குறித்த சட்டமூல வரைவுத் திட்ட பிரதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் நிதி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் அரசாங்கம் விசாரணை நடத்த உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

# இலங்கைக்குத் திரும்பும் தமிழர்களிடம் விமான நிலையத்தில் பணம் பறிமுதல்

## பயணிகள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு சென்று பின்னர் இலங்கைக்கு திரும்புகின்றவர்களிடம் கட்டுநாயக்க விமானநிலையத்தில் கடமையாற்றும் விமான நிலைய பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் பணம் பறிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இது குறித்து தெரியவருவதாவது,

இலங்கையில் கடந்த காலங்களில் நிலவி வந்த அசாதாரண நிலைமையின் காரணமாக வெளிநாடுகளுக்கு சென்றவர்கள் அங்கு சில காலம் தங்கி மீண்டும் தமது நாட்டிற்கு திரும்பும் போதே பயணிகளிடம் பாதுகாப்பு கடமையில் ஈடுபடும் உத்தியோகஸ்தர்கள் பணம் பறிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக தெரியவருகின்றது.

இலங்கையின் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடமையின் நிமித்தம் பணியாற்றுபவர்களில் பொலிஸ் மற்றும் இராணுவத்தினரைத் தவிர்ந்த பாதுகாப்பு கடமையில் ஈடுபடும் விமானநிலைய சிவில் பாதுகாப்பு பிரிவு உத்தியோகஸ்தர்களே மேற்படி பணம் பறிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மை நாட்களாக இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற போதும் பலர் பயத்தின் காரணமாக வாய்திறப்பதில்லை எனவும் சொல்லப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க விமான நிலையத்தில் பணியாற்றும் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் விமான நிலையத்தில் வந்திறங்கும் பயணிகளிடம் உங்களின் பெயர் விபரங்கள் குற்றப்புலனாய்வு பொலிஸாரினால் எமக்கு வழங்கப்பட்டிருப்பதாக முதலில் தெரிவிக்கின்றனராம்.

அதன்பின்னர் அதிர்ச்சியில் உறைந்து போயிருப்பவர்களிடம் நீங்கள் இங்கு வந்தால் உங்களை உடனடியாக இலங்கையை விட்டு வெளியேற்றிவிடும் படியும் எங்களுக்கு தெரிவித்திருக்கிறார்கள் என்று கூறிவருகின்றராம்.

அத்துடன் உங்களை இலங்கைக்குள் அனுமதிக்க பல நடைமுறைகள் இருக்கின்றது எனவும் அதற்கு பெருமளவில் பணம் செலவாகும் எனவும் விமான நிலைய உத்தியோகத்தர்கள் தெரிவித்து வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் குறித்த பயணிகளும் பயத்தினால் தம்மிடம் இருந்த இலங்கை பணம் அல்லது வெளிநாட்டு நோட்டுக்களையே அவர்களுக்கு கொடுத்த பின் விமான நிலையத்திலிருந்து வெளியில் செல்ல வேண்டியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு இலங்கையின் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தமிழ் மக்கள் தினம் இப்படி பலவித கெடுபிடிகளுக்கு உள்ளாவதாக தமது பெயர் குறிப்பிடவிரும்பாத பயணிகள் தெரிவித்திருப்பதாக தெரியவருகின்றது. (ச-5)

# ஆயிரம் பொலிஸாருக்கு திடீர் இடமாற்றம்

மேல்மாகாணத்தில் செயற்பட்டு வந்த பொலிஸ் விசேட நடவடிக்கை பிரிவு கலைக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவின் பொறுப்பதிகாரியாக இருந்த நிமால் மெதிவக்க உட்பட ஆயிரம் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவுக்கு எதிராக மருதானை அச்சகம் ஒன்றில் அச்சிடப்பட்டிருந்த பல சுவரொட்டிகளை இந்த பொலிஸ் குழுவே கைப்பற்றியிருந்தது.

இந்த சம்பவத்தின் அடிப்படையிலேயே குறித்த நடவடிக்கை பிரிவு கலைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை, பொலிஸ் திணைக்களத்தினால் உத்தியோகபூர்மற்ற முறையிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு இந்தப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் முதலாவது பொறுப்பதிகாரியாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி நிமல் லிவ்ஹே சேவையாற்றினார். (ச-5)

யாழ். மக்கள் அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க
வலம்புரியின்
திருமண தரிசனம்
உங்கள் வலம்புரியில் ஞாயிறு தோறும் வெளிவரும்.
எங்கள் உறவுகளின் வெளிநாட்டு தொடர்புக்காக இணையத்தளத்திலும் திருமண தரிசனம் வெளிவரும்.
அன்பார்ந்த பெற்றோர்களே! உங்கள் பொறுப்பை இலகுவாக்க வலம்புரியின் சேவையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



தொடர்பு:
நேரில்
இல. 3,2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.




# ஐ.தே.கட்சியின் தேசியப் பட்டியலில் 15 சிறுபான்மையினர் உள்ளடக்கம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியின் தேசியப் பட்டியலில் 15 சிறுபான்மையினருக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரி.எம்.சுவாமிநாதன், ஆர்.யோகராஜன், அஹமட் அசன் மொஹமட் அலவி, நிசாம் காரியப்பர், எஸ்.எல்.மனோதரன், ரீ.ஹசன் அலி, மயில்வாகனம் திலகராஜா, மசூர் சின்னலெப்பை, மாணிக்கம் லோகசிங்கம், மங்களேஸ்வரி ஜெயரட்ணம், அமீர் மொஹமட் பாயிஸ், எம்.எஸ்.செல்லசாமி, அசீம் மரிக்கார், பீ.கணேசன், எஸ்.மனோகரன் ஆகியோர் ஐக்கிய தேசிய முன்னணியில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தேசிய பட்டியலில் எட்டு சிறுபான்மை இனத்தவர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

எம்.எச்.மொஹமட், முத்து சிவலிங்கம், சண்முகம் ஜெகதீஸ்வரன், மொஹமட் முசம்மில், விநாயகமூர்த்தி முரளீதரன், சந்திரசேகரன் சண்முகநாதன், ஏ.எச்.எம். அஸ்வர் மற்றும் யூ.எல்.சாகுல் ஹமீட் ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

ஜெனரல் சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயக தேசிய முன்னணியின் தேசியப் பட்டியலில் ஒரு சிறுபான்மையினரும் உள்ளடக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# இன்று ஒரு தகவல்

## முட்டாள்கள்

முட்டாள்களில் மூன்று வகை உண்டு.

முதல் வகை முட்டாள் எப்படியானவன் என்றால் அவனுக்கு உண்மையிலேயே ஒன்றும் தெரியாது. அது மட்டுமல்ல... தனக்கு ஒன்றுமே தெரியாது என்பது கூட அவனுக்குத் தெரியாது. இது சாதாரண வகை.

இரண்டாவது வகை முட்டாளுக்கும் எதுவுமே தெரியாது. அதேசமயம் தெரிந்தது போல் காட்டிக்கொள்வான்.

உதாரணத்துக்கு சங்கீதம் என்றால் என்னவென்றே தெரியாது. ஆனால் முதல் வரிசையில் உட்கார்ந்து கொண்டு தெரிந்தது போல் தலையை ஆட்டிக் கொண்டு இருப்பான். இவர்கள் கொஞ்சம் படித்த முட்டாள்கள்.

மூன்றாவது வகையினர் எப்படிப்பட்டவர்கள் என்றால்... தனக்கு ஒன்றுமே தெரியாது என்பது அவர்களுக்கு மட்டும்தான் தெரியும். ஆனால் நமக்குத் தெரியாது. நாம் அவர்களைப் பெரிய அறிவாளிகள் என்று நினைத்துக் கொண்டிருப்போம்.

பாமரர்கள், படித்தவர்கள், பெரிய மனிதர்கள் ஆகியோருக்கு மத்தியில் இந்த மூன்று வகையான ஆசாமிகளையும் இன்றைக்குச் சர்வசாதாரணமாக கண்டுபிடிக்கலாம். ஆனால் கொஞ்சம் புத்திசாலித் தனம் வேண்டும்.

இந்த உலகத்தில் ஒவ்வொருவரும் முதலில் சாதாரண முட்டாள்களாகத்தான் பிறக்கிறார்கள். ஒவ்வொரு குழந்தையும் சாதாரண முட்டாள்தான். அதற்கு எதுவுமே தெரியாது. தனக்கு எதுவுமே தெரியாது என்பதுகூட அதற்குத் தெரியாது. ஆகையினால் அதெல்லாம் முதல் வகையைச் சேர்ந்ததுதான். அதன் பின் வளர வளர...

உலக விடய ஞானம் என்ற பழத்தை உண்ண வேண்டியிருக்கிறது. விடயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

எளிமையாள முட்டாள் தனத்திலிருந்து அறிவுள்ள முட்டாள் தனத்துக்கு ஒரு குழந்தை மாறுகிறது.

பெரியவர்களானதும் சிலர் தெரியாததையும் தெரிந்தது போல் காட்டிக் கொள்ள முயற்சிக்கிறார்கள்.

சிலர் தனக்கு தெரியாததை மற்றவர்களும் தெரிந்து கொள்ளாதவாறு பார்த்துக் கொள்கிறார்கள்.

நண்பர் ஒருத்தர் ஒரு கதை சொன்னார்.

ஒரு பெரிய மனிதரிடம் ஒருத்தன் வேலை பார்த்தான். அவன் எதையும் சரியாகப் புரிந்துகொண்டு வேலை செய்வதில்லை.

அதனால் அவர் என்ன செய்தார் என்றால் ஒரு அட்டையில் முட்டாள் என்று எழுதி அந்த அட்டையை அவனுடைய கழுத்தில் மாட்டிவிட்டார். அவனும் அதைப்பற்றிக் கவலைப்படாமல் அப்படியே வைத்துக் கொண்டான்.

ஒரு நாள் அந்த பெரியவர் வயதாகி சாகக் கிடந்தார். இந்த வேலைக்காரன் அவரிடம் போய் நின்றான்.

"இதோபாரப்பா... இனிமேலாவது நீ புத்திசாலியாக இரு. நான் போய் வருகிறேன்" என்றார்.

"எங்கே போறீங்கய்யா?" என்று கேட்டான் இவன்.

"திரும்பி வர முடியாத இடத்துக்கு போகிறேன்" என்றார்.

"அந்த இடம் எங்கே இருக்கிறது?" என்றான்.

"எனக்குத் தெரியாது" என்றார்.

"அதற்கு எந்த வழியாகப் போகப்போறீங்க?"

"அதுவும் எனக்குத் தெரியாது."

"அது எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?"

"அதுவும் எனக்குத் தெரியாது."

"காரை எடுத்துக் கொண்டு போகலாமா?"

"முடியாது."

"வண்டியில் போகலாமா?"

"அதுவும் முடியாது."

"ஆனால் போறது மட்டும் நிச்சயமா?"

"ஆமாம்!"

அதற்கு அந்த வேலைக்காரன் சொன்னான்.

"ஐயா எங்கே போறதென்று தெரியவில்லை. வழியும் தெரியவில்லை. ஆனால் போகப்போவது மட்டும் நிச்சயம்" என்று சொல்றீங்க.

அதனால் என்னைவிட உங்களுக்குத்தான் இந்த அட்டை பொருந்தும் என்று சொல்லி தன் கழுத்திலிருந்த அட்டையை எடுத்து தன்னுடைய முதலாளியின் கழுத்தில் மாட்டிவிட்டான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

---

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடத்திய

# க.பொ.த. (உயர்தரம்) கணித, விஞ்ஞான வர்த்தக பிரிவு பாடப் பரீட்சை பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினால் க. பொ.த. உயர் தரம் - 2010 மாணவர்களுக்காக நவம்பர் மாதம் நடத்தப்பட்ட கணித, விஞ்ஞான, வர்த்தகப் பாடப் பரீட்சையில் புள்ளி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 30 மாணவர்களின் பெயர் விபரங்கள் நிலையத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. அவை வருமாறு;

### உயிரியல் பிரிவு

ஏ. நிதர்ஷன் (கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி), வி. நிஷாந்திகா, ஏ. பகீரதி (வேம்படி மகளிர் கல்லூரி), வி. அரவிந்தன் (நெல்லியடி ம.ம.வி), ரி. சுதாசினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), எஸ். தாரணி, ஏ. சுபாங்கி (வேம்படி மகளிர் கல்லூரி), சி. சாயிதா (வட இந்து மகளிர் கல்லூரி), எஸ். றுக்சிகா (வேம்படி மகளிர் கல்லூரி), கே.நிருஜன் (யாழ். இந்துக் கல்லூரி), பி. துவாரகா (வேம்படி மகளிர் கல்லூரி), எஸ். கஜானன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஆர். ஹம்சத்வனி, எஸ். யசோதா (வேம்படி மகளிர் கல்லூரி), எஸ். டினேஸ்காந் (யாழ். இந்துக் கல்லூரி), யூ. நிவேதிகா, ஏ. ஜனித்திரி, ரி. கௌசிகா, எஸ். பகீரதி (வேம்படி மகளிர் கல்லூரி), வி. சரண்ஜா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), வி. லலிதாம்பிகா, எஸ். வைஸ்ணவி (வேம்படி மகளிர் கல்லூரி), எஸ். யூலிட்ஸ் ஹெலினா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), க. தேவகி (வட இந்து மகளிர் கல்லூரி), ஆர். சாயிபானு, பி. ரேகா, எஸ். றஜிதா, ஜி. தாட்சாயினி, பி. தீபிகா (வேம்படி மகளிர் கல்லூரி).

### கணிதப் பிரிவு

எஸ். சுமங்கலி (வேம்படி மகளிர் கல்லூரி), த. திருத்தணிகன் (யாழ். இந்துக் கல்லூரி), என். நிலுசியா (மெதடிஸ்த மகளிர் கல்லூரி), எஸ். அருளினி (நெல்லியடி ம.ம.வி.), இ. ஸ்ரீசியாமளன், அ. சசிந்தன் (யாழ். இந்துக் கல்லூரி), கே. மயூரேசன் (உடுப்பிட்டி அ.மி.க.), எஸ். சிந்துஜா (நெல்லியடி ம.ம.வி.), பி. டர்சன் (யாழ்ப்பாணக் கல்லூரி), மு. பிருந்தாபன், வெ. ஜெயபிரசாத் (யாழ். இந்துக் கல்லூரி), ஆர். செல்வபவித்ரா (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), ஏ. பிலிப் (சென்பற்றிக்ஸ் கல்லூரி), செ. நிரோஜன், அ. லஜீரன் (யாழ். இந்துக் கல்லூரி), ஏ. சஜீவன் (உடுப்பிட்டி அ.மி.க.), எஸ். சுலக்ஷனா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), எஸ். அபிராமி (வேம்படி மகளிர் கல்லூரி), ரி. அரண்ஜா (நெல்லியடி ம.ம.வி.), லோ. கோபிநாத் (யாழ். இந்துக் கல்லூரி), ரி. உதயபவன், பி. விஸ்ணுகாந், (கொக்குவில் இந்துக் கல்லூரி), பி. மதுரதி (வேம்படி மகளிர் கல்லூரி), பி. கஜனன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ந. சதீஸ்வரன் (யாழ். இந்துக் கல்லூரி), ஆர். றஜீவன் (சென்பற்றிக்ஸ் கல்லூரி), எம். ரேகதீபன் (புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி), இ. ஞானசுகிர்தன் (யாழ். இந்துக் கல்லூரி), எஸ். அயனன் (புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி), நா. வர்மன் (யாழ். இந்துக் கல்லூரி)

### வர்த்தகப் பிரிவு

என். டிலக்ஷி (கொக்குவில் இந்துக் கல்லூரி), ரி. மயூரி, வை. சரணியா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ரி. சசிரூபன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), க. அனித்தா (ஞானாசிரியர் கல்லூரி), ஏ. கோகுலன் (நெல்லியடி ம.ம.வி), அ. அகல்ஜா(வட மத்திய மகளிர் கல்லூரி), ப. விஜிதா (வட இந்து மகளிர் கல்லூரி), எஸ். கிரிதரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), என். ஜீவன் (யாழ். இந்துக் கல்லூரி), கே. சுயாதா (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜி. மாலினி (வட இந்து மகளிர் கல்லூரி), ரி. மதனிகா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), பி. தாரணி (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஆர். தர்சினி (இளவாலை மடம் ம.வி.), ஆர். பவித்திரா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ஜெ. ஜெ. கொலின்டன் (சென்பற்றிக்ஸ் கல்லூரி), கே. பிரசாத் யாழ். இந்துக் கல்லூரி), எஸ். நிமலதீபன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), என். வினோஜா (வட இந்து மகளிர் கல்லூரி), வி. பிரியங்கா (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), ந. மேரிசெலஸ்ரீனா (சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி), க. சிவகௌரி (ஞானாசிரியர் கல்லூரி), ஆர். ஜீவகி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ரி. கௌசிகா (கொக்குவில் இந்துக் கல்லூரி), பி. பிரவினிஜா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), என். அச்சுதன் (யாழ். இந்துக் கல்லூரி), கே. ரோகினி (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), பி. கார்த்திகா, எஸ். பவிதா (நெல்லியடி ம.ம.வி.) (2-4-6)

---

# இராசி பலன்

01-03-2010

(மாசி 17 திங்கட்கிழமை)

பிரதமை முன்னிரவு 8.44 மணி வரை

பூரம் பிற்பகல் 4.53 மணிவரை

இராகுகாலம் 7.58-9.28 மணி வரை

சுபநேரம் 12.28-1.58 மணி வரை

காரைநகர் மணற்காடு மாரி அம்மை கொடி

| | |
|---|---|
| மேடம் | வியாபார நன்மை, பணக்குறைவு, அதிக பிரயாசை, ஆரோக்கியக் குறைவு. |
| இடபம் | மனச்சஞ்சலம், நிலை மாற்றம், கல்வியில் ஆர்வம், தனவிரயம். |
| மிதுனம் | மனோதைரியம், பிரயாண நன்மை அந்நியர் சந்திப்பு, முயற்சி கைகூடும். |
| கடகம் | போசனசுகக் குறைவு, விவாதம், ரோக நிலை, எடுத்த காரியம் தாமதம். |
| சிங்கம் | ஜனவசியம், சயனசுகம், நல்ல முயற்சி, புதிய பொருள் சேர்க்கை. |
| கன்னி | உணர்ச்சிவசப்படல், தனவிரயம், தொழில் நன்மை, திடீர் நன்மை. |
| துலாம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், மனமகிழ்ச்சி, பொருள் சேர்க்கை, உடல் நலம். |
| விருச்சிகம் | கடின உழைப்பு, இனிய தகவல், பிறர் உதவி, தேகநலன். |
| தனுசு | சரீரப்பிரயாசை, கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு, முயற்சி தாமதம். |
| மகரம் | விவாதம், தேவையற்ற பகை, காரிய தாமதம், பணக்குறைவு. |
| கும்பம் | எடுத்த காரியம் கைகூடும், போசன நன்மை, நண்பர்கள் சந்திப்பு, தனலாபம். |
| மீனம் | பண வருவாய், காரிய நன்மை, தொழில் மேன்மை, போசன சுகம். |

வளவன்

---

காரைநகர்-மணற்காடு

அருள்மிகு ஸ்ரீகும்பநாயகி முத்துமாரி அம்பாளின் மகோற்சவ கொடியேற்றம்இன்று (2010-03-01)

ஏறிடும் திருக்கொடிக்கு எம் வணக்கம்



எழில் பொங்கும் காரை மணற்காட்டில்

எண்ணியதைச் சேர்க்கும் கும்பநாயகித் தாயே!

அருள் தந்து வாழ்விக்கும் அன்னையே உன் வீட்டில்


அழகாக ஏறிடும் திருக்கொடிக்கு எம் வணக்கம் (811)

வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன்.

---

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 100 |
| தக்காளி | 40 | 50 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 30 | 30 |
| கோவா | 60 | 70 | 60 |
| கரட் | 80 | 80 | 80 |
| பூசணி | 20 | 40 | 30 |
| புடோல் | 60 | 70 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 50 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 50 |
| பாகற்காய் | 100 | 120 | 90 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 80 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 35 |
| பயிற்றங்காய் | 90 | 100 | 100 |
| லீக்ஸ் | 40 | 100 | 100 |
| பீற்றூட் | 60 | 70 | 70 |
| கறிமிளகாய் | 80 | 90 | 120 |
| முருங்கைக்காய் | 500 | 520 | -- |
| போஞ்சி | 80 | 100 | 60 |
| கத்தரி தம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 25 | 20 | 15 |
| தேசிக்காய் | 80 | 90 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 35 | 30 |





சர்வதேச அபிவிருத்திக்கான கனேடிய நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நரியிட்டான் கிராமத்தில் செயற்படுத்தப்பட்ட சமூக அபிவிருத்திக்கான செயற்திட்ட கையளிப்பு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கனேடிய நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் றொபேட் கமில்டன் இணையநிலா சனசமூக நிலைய பெயர்ப்பலகையைத் திறந்து வைப்பதையும், சுயதொழில் முயற்சிக்குடன் திட்ட சான்றிதழை நிறுவன உத்தியோகத்தரிடம் கையளிப்பதையும், அருகில் ஐக்கியநாடுகள் அபிவிருத்தி திட்ட தலைமை அதிகாரி மற்றும் உத்தியோகத்தர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## பசுப்பால் விநியோகம் மீண்டும் ஆரம்பம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச மாணவர்களுக்கு சமூர்த்தி சங்கத்தின் அனுசரணையுடன் சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் விற்பனை செய்யப்பட்டு இடைநிறுத்தப்பட்டிருந்த பசுப் பால் விநியோகம் நாளை திங்கட்கிழமை மீளவும் விநியோகிக்கப்படவுள்ளது.

அத்துடன் கூட்டுறவுச் சங்கத்தினால் முன்பு இயங்கிய விற்பனை நிலையத்தில் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளதாகவும் பொதுமக்கள் தமக்குத் தேவையான பசுப் பாலை இங்கு கொள்வனவு செய்யலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பண்ணையாளர்கள் தமது பண்ணைப் பசுப்பாலை நியாயவிலையில் சங்கத்திற்கு விநியோகிக்க முடியுமெனவும் சங்கத்தலைவர் தெரிவித்துள்ளார்.(4-29)

## கணிதபாட நிலையறி மதிப்பீட்டு மீள்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 7 ஆம் திகதி யாழ்.கல்வி வலயத்தில் தரம் 6 முதல் 10 வரையிலான மாணவர்களிற்கான கணித பாட நிலையறி மதிப்பீடு நடத்தப்பட்டது. அவை திருத்தப்பட்டு விடைத்தாள் பகுப்பாய்வின் அடிப்படையில் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நடத்தப்பட்டு பின்னூட்டல் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன.

இம் மாண வர்களிற்கான (தரம் 7-11) மீள்பரீட்சையை இந்தமாதம் 18 ஆம் திகதி நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே இதற்காக மாணவர்களைத் தயார்ப்படுத்தி அடைவை அதிகரிக்க வேண்டுமென அதிபர், கணித ஆசிரியர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (6-4)




## கொரியன் அக்குபஞ்சர் விசேட சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

சுதேச வைத்திய அமைச்சும் ஆயுள் வேதத் திணைக்களமும் இணைந்து நடாத்தும் கொரியன் அக்குபஞ்சர் விசேட சிகிச்சை எதிர்வரும் 3,4,5ஆம் திகதிகளில் காலை 8 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை கைதடி சித்தபோதனா வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

கொழும்பிலிருந்து விசேட வைத்திய நிபுணர்கள் வருகைதரவுள்ளதால் அக்குபஞ்சர் சிகிச்சை பெற விரும்பும் நோயாளரை சிகிச்சையில் கலந்துகொள்ளுமாறு கைதடி சித்த போதனா வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார். (6-14)

# மண்கும்பான் கிராமத்திற்கு மின்சாரவசதியை பெற்றுத் தருமாறு மக்கள் கோரிக்கை

(வேலணை)

வேலணை மண்கும்பான் கிராமத்திற்கு மின்சார வசதிகளை பெற்றுத்தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மேலும் 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த செயற்பாடுகளினால் மின்சார விநியோகம் முற்றாகத்தடைப்பட்டதும் அதன் உபகரணங்கள் முற்றாக சேதமடைந்துள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே பலவருடங்களாகியும் இதுவரையும் மின்சாரம் பெற்றுக்கொடுக்கப்படாததால் சம்பந்தப்பட்டவர்கள் மீண்டும் மின்சார வசதியை பெற்றுத் தருவிதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (6-4-22)

## விண்ணப்பம்கோரல்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி மத்திய கல்லூரியில் முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ் 2010 ஆம் ஆண்டுக்குரிய கணனி மென்பொருள் கற்கைநெறி, கண்னி வன்பொருள், சிங்களம், மனை முகாமைத்துவம் ஆகிய கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இக் கற்கைநெறிகளுக்கு பாடசாலையை விட்டு விலகியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இக் கற்கை நெறியைப் பயில விரும்புவோர் கல்லூரியிலோ அல்லது யாழ்.வலய கல்வித்திணைக்களத்திலோ விண்ணப்பப் படிவங்களை பெற்று எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்குமாறு கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். (6-4)

## பாராட்டு விழாவும் உதவி வழங்கலும்

(கைதடி)

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தினால் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்து தற்போது கைதடி கிராமத்தில் வசித்து வரும் மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

அத்துடன் கடந்த ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற இடம்பெயர்ந்த மாணவர்களுக்கும் அன்பளிப்பு நிதி வழங்கப்பட்டது.

மேற்படி நிதியுதவிகள் புலம்பெயர்ந்து சுவிஸ் நாட்டில் வாழும் நிலைய அங்கத்தவரான கந்தையா கந்தசாமி என்பவரால் அன்பளிப்பு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-4-6)

# மறவன்புலோவில் கட்டாக்காலி மாடுகளை பிடிப்பது தொடர்பான தீர்மானம்

(தனங்கிளப்பு)

தனங்கிளப்பு மறவன்புலோ பகுதியில் உள்ள 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டாக்காலி மாடுகளை பிடிப்பது தொடர்பாக தென்மராட்சி பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீனிவாசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய சிரமத்தை தவிர்ப்பதற்காக மறவன்புலோ கமக்கார அமைப்பில் உள்ள மாடுகளின் உரிமையாளர்கள் எதிர்வரும் 5 ஆம்திகதிக்கு முன்னர் மறவன்புலோ கமக்கார அமைப்பின் தலைவர் திருஞானசம்பந்தர் வீட்டில் காலை 6 மணி முதல் 9 மணிவரை தமது மாடுகள் தொடர்பான விபரங்களை சமர்ப்பித்து பதிவுகளை மேற்கொள்ளுமாறும் 5ஆம் திகதிக்கு பின்னர் பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும் தென்மராட்சி பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.(6-4-37)

# கணனி வலைப்பின்னலுடன் இணையும் மக்கள் வங்கி கிளைகள்

மக்கள் வங்கியின் சுன்னாகம், பருத்தித்துறை, நெல்லியடி ஆகிய கிளைகளின் மத்திய மயப்படுத்தப்பட்ட தரமுயர்த்திய கணனி வங்கிச் சேவை தொடக்கவிழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் முற்பகல் 9 மணிக்கு நடைபெறும் சுன்னாகம் கிளையின் வங்கிச் சேவை ஆரம்ப வைபவத்தில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் கலந்து சிறப்பிப்பதுடன் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் பருத்தித்துறை கிளையின் வங்கிச் சேவை ஆரம்ப வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடப் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும் முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ள நெல்லியடிக் கிளையின் வங்கிச் சேவை ஆரம்ப வைபவத்தில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

மேலும் இந்நிகழ்வில் வடவலய உதவிப் பொது முகாமையாளர் ரி.கே.ஆனந்தராஜா, யாழ்.பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன், யாழ்.உதவிப் பொதுமுகாமையாளர் எஸ்.ஹென்றி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (6-4)

## வலைப்பந்தாட்ட போட்டி

(வேலணை)

வேலணை கல்வி கோட்ட மட்டத்திலான 2010 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகளில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி இன்று திங்கட்கிழமை வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தின் விளையாட்டு திடலில் நடைபெறவுள்ளது.

இவ்விளையாட்டு நிகழ்வில் வேலணைக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (4-22)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

வேலணை மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் பி. அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறை கிளை முகாமையாளர் கே.சிவஞானசுந்தரம் கலந்து சிறப்பிப்பதுடன் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி ஏ.சிவஞானசுந்தரம் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (6-4)

## சிறுகதை நூல் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு சுன்னாகம் சித்தி விநாயகர் நூல் நிலைய வெளியீடாக சிறுகதை, கவிதை எழுத்தாளர் தமிழ்ப் பிரியாவின் காம்பு ஒடிந்த மலர் சிறுகதை நூல் வெளிவந்துள்ளது.

முதலாம் பதிப்பாக வெளிவந்துள்ள இந்நூல் 14 சிறுகதைகளை கொண்டமைந்துள்ளது.

இந்நூலில் கடந்த இருபத்தை ந்து ஆண்டுகளிற்கு முன் பத்திரிகைகளில் பிரசுரமான சிறுகதைகளின் தொகுப்பு உள்ளடக்கப்பட்டுள்ளதாக நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். (4-14)

## அந்தியேட்டி மடம் அகற்றப்படுவதாக தெரிவிப்பு

(வேலணை)

வேலணை வெள்ளைக் கடற்கரையில் அமைக்கப்பட்டிருந்த அந்தியேட்டி மடம் அகற்றப்படுகின்றமையால் மக்கள் விசனமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 45 வருடகாலமாக இம் மடத்தில் அந்தியேட்டி நிகழ்வு நடைபெற்று வந்ததாகவும் தற்போது இம்மடத்தின் கூரைகள் அகற்றப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

மேலும் இப்பகுதி உல்லாசப்பிரயாணிகளுக்கான கடற்குழியல் இடமாகவும் பொதுமக்கள் கடற்கரை ஓய்வு இடமாகவும் ஆக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. (6)

# ஈழத்து இலக்கியமும் வரலாறும் 21

செகராசசேகரன் சங்கிலி என்ற அரசனுடைய காலத்திலே (1519–1561) வாழ்ந்த வையாபுரி ஐயர் என்பவர் வையாபாடலை எழுதினார் என்பது மரபு. ஈழத் தமிழரின் வரலாற்று நூல்களிலே மிகப்பழையதான *வையாபாடல்* அடங்காப்பற்று எனப் பிற் காலத்திலே வழங்கிய வன்னிப் பகுதியிலே வன்னிப் பிரதானிகள் தங்கள் ஆட்சியை ஏற்படுத்தியமை பற்றிச் சில விரிவான குறிப்புக்களைக் கொண்டுள்ளது. சிங்கையாரியன் என வழங்கிய முதலாம் ஆரியச் சக்கரவர்த்தி பாண்டி நாட்டிலிருந்து வந்து யாழ்ப்பாண இராச்சியத்திலே ஆதிக்கம் பெற்று, அங்கு நல்லூரிலே இராசதானியையும் கைலாயநாதர் கோயிலையும் அமைத்து இராச்சியத்திலே நிர்வாக ஒழுங்குகளை ஏற்படுத்தியமை பற்றிக் *கைலாயமாலை* செய்யுள் வடிவிலே இலக்கிய நயம் பொருந்திய வண்ணமாக எடுத்துரைக்கின்றது. அதனை உறையூர்ச் செந்தியப்பரின் மகனாகிய முத்துராச கவிராயர் பதினேழாம் நூற்றாண்டிலே எழுதினார். இப்பொழுது எமக்குக் கிடைக்காத மற்றைய இந் நூல்களினைப் பற்றி யாழ்ப்பாண வைபவமாலையின் மூலமாகவே அறியவேண்டியுள்ளது.

ஒரு வரலாற்று நூலின் பொருளடக்கம், இலக்கிய வடிவம் ஆகியவற்றை ஆராயுமிடத்து அதன் ஆசிரியரைப் பற்றியும் அவருக்குக் கிடைத்திருந்த மூலாதாரங்களைப் பற்றியும் அறிவது அவசியம். மயில்வாகனப் புலவருடைய புலமை, அறிவு, மனப்பாங்கு, அவரின் சமுதாயப் பாரம்பரியம் ஆகியவற்றை முன்பு கவனித்தோம். *யாழ்ப்பாண வைபவமாலையின்* அமைப்பினையும் தன்மையினையும் அதற்கு மூலதாரமாக அமைந்துள்ள நூல்கள் பெருமளவிற்கு நிர்ணயித்துள்ளன. *யாழ்ப்பாண வைபவமாலையின்* குறைபாடுகள் பெரும்பாலும் அதன்மூல நூல்களிலிருந்து வந்துள்ளன. மயில்வாகனப் புலவரும் காலவரையறை பற்றித் தெளிவான விளக்கங் கொண்டிருக்காதமையினாலே வரலாற்று நிகழ்ச்சிகள் சிலவற்றின் காலவரையறையினை மாற்றியுள்ளார்.

**உக்கிரசிங்கன்- மாருதப்புரவீகவல்லி**

யாழ்ப்பாண வைபவமாலை வர்ணிக்கும் யாழ்ப்பாணத்து வரலாற்றை ஆரியச் சக்கரவர்த்திகளுக்கு முற்பட்ட காலம், ஆரியச் சக்கரவர்த்திகளின் காலம் என இரு பிரிவுகளாக வகுத்து நோக்கலாம். ஆரியச்சக்கரவர்த்திகளுக்கு முற்பட்ட காலத்தைப் பற்றிய கதைகள் பெரும்பாலும் வரலாற்று ஆதாரமற்றவை. அவை பொதுவாகவே புனைகதைகளாயுள்ளன. ஈழத்தமிழ் வரலாற்று நூல்களிலே யாழ்ப்பாண இராச்சியம் எழுச்சி பெறுவதற்கு முற்பட்ட காலத்தைப் பற்றிய வரலாற்று மரபுகள் இடம்பெறவில்லை. எனவே, பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட ஈழத்தமிழர் வரலாற்றைப் பொறுத்தவரையில் *யாழ்ப்பாண வைபவமாலை* போன்ற நூல்களில் வரலாற்றுக் குறிப்புக்களை எதிர்பார்க்க முடியாது. ஆரியச்சக்கரவர்த்திகளுக்கு முற்பட்ட கால வளர்ச்சிகளை விளக்குவதற்கென உருவக்கப்பட்டமையே உக்கிரசிங்கன் –மாருதப்புரவீகவல்லி கதை, யாழ்ப்பாணன் கதை போன்றவை. இவ்விரு கதைகளும் மயில்வாகனப்

## யாழ்ப்பாண வைபவமாலை

புலவர் காலத்துக்கு முற்பட்டவை. அவை மூல நூல்களிலிருந்து பெறப்பட்டவை.



*கைலாயமாலை, வையாபாடல்* ஆகியவற்றில் இடம்பெற்றிருக்காத விசயராசன் கதை யாழ்ப்பாண வைபவமாலையிலே வருகின்றது. அது சிங்களவினத்தின் தோற்றம் பற்றிச் சிங்கள வரலாற்று மரபிலுள்ள கதைகளை மயில்வாகனப் புலவர் அறிந்திருந்தார் என்பதற்குச் சான்றாயுள்ளது. விசயனைப் பற்றி மயில்வாகனப் புலவர் தரும் குறிப்புக்கள் மகாவம்சம் முதலியநூல்களிலுள்ளவற்றிலிருந்து ஓரளவிற்கு வேறுபடுகின்றன. திருகோணமலை, மாதோட்டம், கீரிமலை, தேநு வரை ஆகியவிடங் களில்



உள்ள தேவாலயங்களை விசய ராசனே அமைப்பித்தான் என்ற கூற்று முற்றிலும் பொருத்தமற்றது. விசயன் கதையினையடுத்து குளக்கோட்டனைப் பற்றியும் முக்குவனைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. புராதன காலத்திலிருந்தே யாழ்ப் பாணத் திலே மலை யாள முக்குவரின் குடியேற்றங்கள் அமைந்திருத்தல் கூடுமென்ற கருத்தினை இவை ஏற்படுத்து கின்றன. குளக்கோட்டன் பற்றிய குறிப்புக்களை கோணேசர் கல்வெட்டின் மூலம் மயில்வாகனப் புலவர் பெற்றிருக்க வேண் டும். இலங்கையில் ஏற்பட்ட வன்னிக் குடியேற்றங்கள் இரு வேறு காலகட்டங்களிலே குளக்கோட்டன் காலத்திலும் பின்பு பாண்டி நாட்டால் வந்த வன்னியரின் காலத்திலும் ஏற்பட்டிருந்தன என்ற கூற்று கவனித்தற்பாலது.

ஆனால் அக்கிரபோதி மகாராசனுடைய காலத்திலே குளக்கோட்டன் வாழ்ந்தானென்று மயில்வாகனப் புலவர் கருதியமை முற்றிலும் தவறானது. குளக்கோட்டன் பிற்காலத்தவன் என்பதை பிற ஆதாரங்கள் மூலமாக அறியமுடிகின்றது. உக்கிரசிங்கன் – மாருதப்புரவீகவல்லி கதையானது யாழ்ப்பாண இராச்சியத்தின் உற்பத்தியை விளக்குவதற்குச் சிங்கள இராச்சியத்தின் உற்பத்தி பற்றிய கதையை பயன்படுத்த மேற்கொண்ட முயற்சியின் விளைவாகும். அது விசயன் கதையி லுள்ள அம்சங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

விசயன் கதையிலுள்ள சிங்கபாகு, சிங்கவல்லி ஆகியோர் தமிழ் மரபிலே உக்கிரசிங்கன் எனவும் மாருதப்புரவீக வல்லி எனவும் பெயர் மாற்றி வந்துள்ளனர். உக்கிரசிங்கன் கதையினை ஆதாரமாகக் கொண்டு ஆரியச்சக்கரவர்த்திகளின் காலத்துக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்து யாழ்ப்பாணத்திலே கலிங்கரின் ஆட்சி நிலவியது என்ற இராசநாயகம் போன்றவர்களினுடைய வாதம் பொருத்தமற்றதாகும். உக்கிரசிங்கன் கதையில் வரும் செங்கடநகரி என்ற நகரம் யாழ்ப்பாணத் தலைநகர் ஆகிய சிங்கை நகரை அன்றி மயில்வாகனப் புலவரின் காலத்திலே மலைநாட்டிலே சிங்கள மன்னர்கள் அமைத்திருந்த செங்கடகலை என்னும் ஊரையே குறிப்பதாகவுள்ளது.

பேராசிரியர்
**சி.பத்மநாதன்**

மாருதப்புரவீக வல்லி பற்றிய கதையானது மாவிட்டபுரம் , கீரிமலை ஆகிய தலங்களின் வளர்ச்சியை விளக்குவதற்கென எழுந்த புனைக்கதையாகும். அதிலே சோழராட்சிக் காலத்து நிகழ்ச்சிகள் சிலவற்றைப் பற்றிய ஐதீகங்கள் கலப்புற்றிருத்தல் கூடும். மயில்வாகனப் புலவர், வையாபாடல், கைலாயமாலை ஆகியவற்றிலுள்ள உக்கிரசிங்கன் – மாருதப்புரவீகவல்லி பற்றிய புனைக்கதையை தொண்டைமானாறு, கீரிமலை போன்ற வற்றைப் பற்றிய ஐதீகங்களோடு சேர்த்து விரிவுபடுத்தியுள்ளனர். (தொடரும்)

---

யாழ்.வலயத்தில் இணைப்புப் பெற்ற

## கிளிநொச்சி வலய ஆசிரியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவு

யாழ்.மாவட்டத்தில் இணைப்புப் பெற்று கிளிநொச்சியில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களில் கடந்த 26, 27 ஆம் திகதிகளில் மாசிமாத சம்பளப் பட்டியலில் கையொப்பமிடாதவர்கள் இன்று திங்கட்கிழமை யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில் கையொப்பமிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

தவறும்பட்சத்தில் கிளிநொச்சி வலய கல்வி அலுவலகத்தில் கையொப்பமிடமுடியும் எனவும், கையொப்பமிடவரும்பொழுது B.100 வங்கி கணக்கிலக்கத்தையும் கொண்டு வருமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா அறிவித்துள்ளார். (4)


## வெள்ளைக்கடற்கரை பள்ளிவாசல் திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

வேலணை வெள்ளைக் கடற்கரையில் உள்ள பள்ளிவாசல் திருத்தப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

இப்பள்ளிவாசல் 1990 ஆம் ஆண்டு நடைபெற்ற இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்தது. இதன்போது இப் பகுதியில் வசித்து வந்த முஸ்லிம் சமூகத்தினரும் வெளியேறினார்கள். கடுமையாக சேதமடைந்த இப் பள்ளிவாசலையே தமது தொழுகைக்காக இஸ்லாம் மதத்தினர் சிறிதளவான திருத்தத்தை மேற்கொண்டு வருகின்றனர். இப்பள்ளிவாசல் யாழ்ப்பாணத்தில் பிரசித்திபெற்ற தலமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் தற்போது இப்பகுதியில் பதினைந்து வரையான குடும்பங்கள் மீளக் குடியேறியுள்ளனர். (2-22)







யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற 10ஆயிரம் மீற்றர் தூரத்திற்கான மரதன் ஓட்டப் போட்டிக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸாரும், சுகாதார சேவைப்பணியாளர்களும் , உதவியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுடன் கல்லூரி அதிபர் அ.ஈஸ்வரநாதன் நிற்பதனை முதலாவது படத்திலும், போட்டிக்குத் தயாராகும் மாணவர்களை இரண்டாவது படத்திலும், போட்டியின் முடிவில் முதலாம் இடத்தினை சுவீகரித்துக் கொண்ட மாணவன் த.காண்டீபனை மூன்றாவது படத்திலும் காணலாம்.





கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயத்தின் இல்லமெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வவுனியா வடக்கு பிரதேச செயலக கணக்காளரும் பழைய மாணவருமான ம.சிவகுமார் விளையாட்டு நிகழ்வை ஆரம்பித்துவைத்து உரையாற்றுவதையும் மாணவிகளின் உடற்பயிற்சி நிகழ்வையும் வெற்றி பெற்ற இல்லத்துக்கான அணித் தலைவருக்கு பிரதம விருந்தினர் கேடயத்தை கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

# வேட்பாளர் தெரிவில் தேசிய, சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுக்கே முன்னுரிமை

**மைத்திரிபால சிறிசேன**

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக வேட்பாளர்களைத் தெரிவு செய்யும்போது தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டிருப்பதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதில் பெண்களின் பிரதிநிதித்துவம் 6 சதவீதமாகும். மேலும் சட்டத்துறைக்கு 13 சதவீதமும் மருத்துவத்துறைக்கு 3 சதவீதமும் பொறியியல் துறைக்கு 2 சதவீதமும் ஆசிரியர்துறைக்கு 6 சதவீதமும் இளைஞர் துறைக்கு 12 சதவீதமும் என பிரதிநிதித்துவம் வழங் கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் சுமுகமான தேர்தலை நடத்துவதற்கு அனைத்து ஒழுங்குகளும் மேற் கொள்ளப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

நேற்று அநுராதபுரத்தில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; வலுவான பாராளுமன்றம் ஒன்றையும் அமைச்சர்களையும் உருவாக்குவதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர்.

உள்நாட்டு வெளிநாட்டு சக்திகளை தோற்கடிப்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் இன்று நலிவடைந்திருக்கின்றன.

இதற்கு அந்தக் கட்சிகள் மேற்கொண்ட அரசியல் தீர்மானங்களே காரணம். 1948 ஆம் ஆண்டிற்குப் பின் குறுகிய காலத்தில் பாரிய அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக் கப் பட்டமைக்கு தற்போதைய ஜனாதிபதியின் ஆசிர்வாதமே காரணம் ஆகும் எனவும் அவர் தெரிவித்தார். (6)

## மீண்டும் கடல் அட்டை பிடிக்கப்படுகிறது

வேலணைக் கடற்பகுதியில் முன்பு தடை செய்யப்பட்டிருந்த கடல் அட்டைபிடிப்பது தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முன்னர் கடலில் கடல் அட்டையைப் பிடிப்பதற்கு கடற்படையினரின் அனுமதி மறுக்கப் பட்டிருந்தது. தற்போது அனுமதி வழங்கப்பட்ட நிலையில் மீண்டும் மீனவர்கள் கடல் அட்டை பிடிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதன் காரணமாக முன்பு போல இப்போது வேலணை செட்டிப்புலம் மீன்பிடித் துறைமுகத்தில்க டல் அட்டை வியாபாரம் சூடு பிடித்துள்ளதாக அப் பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (4-22)

## சமையல் எரிவாயு விலையை அதிகரிக்க நிறுவனங்கள் விண்ணப்பம்


(கொழும்பு)

வீட்டுப் பாவனைக்கான சமையல் எரிவாயுவின் விலையை இன்று முதல் அதிகரிப்பதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் விண்ணப்பித்துள்ளன.

இதன் விலலையை இரு மாதங்களுக்கு ஒரு தடவை மறுசீரமைக்கும் வகையில் அமைந்த விலைச் சூத்திரத்தின் அடிப்படையிலேயே 12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிக்குமாறு ஷெல் மற்றும் லாப் நிறுவனங்கள் நுகர்வோர் அதிகார சபையைக் கோரியுள்ளன.

விலைச் சூத்திரத்திற்கு அமைய கருத்திற் கொள்ளப்படும் காலப் பகுதியில் சமையல் எரிவாயுவின் இறக்குமதிச் செலவுகள் குறிப்பிடத் தக்க அளவில் அதிகரித்து இருந்தமையினால் அதன்படி விற்பனை விலையில் திருத்தத்தைக் கொண்டுவருமாறு மேற்படி அந் நிறுவனங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. (2-6)

## இந்திய பொது பட்ஜெட்டில் ஈழத் தமிழரின் மறுவாழ்வுக்கு உரிய அறிவிப்புகள் இல்லை -திருமாவளவன் வேதனை



ஈழத்தமிழரின் மறுவாழ்வுக்கு இந்திய பொது பட்ஜெட்டில் உரிய அறிவிப்புக்கள் இல்லாதது வேதனையளிக்கிறது என்று விடுதலைச்சிறுத்தைகள் கட்சித்தலைவரும், சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினருமான தொல். திருமாவளவன் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்திய அரசின் நிதி நிலை அறிக்கையில் 5 சதவீத வட்டியில் விவசாயிகள் கடனுதவி பெறலாம் எனக் கூறப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் வரவேற்கத் தகுந்ததும் பாராட்டுக்குரியதுமாகும்.

மற்றபடி குறிப்பிட்டுச் சொல்லும் படி பாராட்டுக்குரிய அம்சம் ஏதுமில்லையென்பது ஏமாற்றத்தைத் தருகிறது. அத்துடன் தலித் மக்களின் மேம்பாட்டுக்கும், ஈழத்தமிழரின் மறுவாழ்வுக்கும் உரிய அறிவிப்புகள் இல்லாதது வேதனையளிக்கிறது.

இந்திய இராணுவச் செலவுகளுக்கென சுமார் ஒன்றரை இலட்சம் கோடிரூபாய் ஒதுக் கப்பட்டுள்ளது.ஆனால் இதில் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே பள்ளி, கல்வி மற்றும் சுகாதாரத்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இதிலிருந்து சமூக வளர்ச்சித்திட்டங்களை விட இந்தியப் பாதுகாப்பு எனும் பெயரில் செலவுத் திட்டமே மிகுதியாக உள்ளதை அறியமுடிகிறது. இதுவும் தேசத்தின் வளர்ச்சிக்கு உகந்ததாக அமையவில்லை என்பதை உறுதிப்படுத்துகிறது.

பெற்றோல், டீசல் விலை உயர்த்தப்பட்டிருப்பதால் சாதாரண ஏழை எளிய மக்கள் வெகுவாக பாதிக்கப்படுவார்கள் என்பதில் ஐயமில்லை. எனவே பெற்றோல், டீசல் விலை உயர்வை முழுமையாக திரும்பப பெற வேண்டுமென்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் வற்புறுததுகிறோம எனறு கூறிய,ளளார (6-4)

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி

# கூறுவிலை கோரல்

இலங்கை வங்கி - நெல்லியடி கிளையால் 11.02.2010 பிரசுரிக்கப்பட்ட கூறு விலை கோரலில் ஏற்பட்ட விளக்கக்குறைவும், குழப்பமும் காரணமாக நிகழ்ந்த தடங்கலுக்கு வருந்துகின்றோம். அதன் காரணமாக குறிப்பிட்ட கூறுவிலை கோரல் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் புதிய கோரிக்கை பிரசு ரிக்கப்படுகின்றது.

நெல்லியடி இலங்கை வங்கிக் கிளைக்காக கொள்வனவு செய்யப்பட்ட திரையரங்குக் கட்டத்தினை (லக்ஷமி) இடித்து அப்புறப்படுத்துவதற்கான ஒப்பந்த வேலைக்குரிய நிபந்தனைகள்:

மேற்படி திரையரங்கை இடித்து சகல பொருட்களையும் அப்புறப்படுத்தி சுத்தப்படுத்த வேண்டும் அங்குள்ள மீள் பாவனைக்குரிய பொருட்கள் சகலதையும் ஒப்பந்தக்காரர் தனது பாவனைக்கு எடுத்துக்கொள்ளலாம். அதற்கான கூறுவிலை கோரப் படுகின்றது. இலங்கை வங்கி வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் கூறு விலை களைப் பரிசீலித்து தகுந்த ஒப்பந்தக்காரருக்கு இவ் வேலையை ஒப்படைப்பார் இவ் வேலை சம்பந்தமாக இலங்கை வுங்கி வடமாகாண உதவிப் பொது முகாமையாளரின் தீர்மானமே முற்றும் முடிவுமானதுமாகும்.

அ. இடித்து அழிக்கும் வேலை கீழ்காணும் விடயங்களை உள்ளடக்கி இருக்கும்.

1. கட்டடத்தின் கூரையினை அகற்றல்.
2. அத்திவாரத்தின் மேல் உள்ள சுவர் மற்றும் கொங்கீறீற் பகுதிகளை இடித்தழித்தல்.
3. கொங்கிறீற் உள்ளடங்கலாக முழு அத்திவாரத்தினையும் இடித்தழித்து அகற்றல்.
4. கட்டடத்தினை இடித்தழிக்கும் போது ஏற்படும் குழிகள், பள்ளங்கள் அனைத்தையும் வெளியில் இருந்து கொண்டுவரப்பட்ட கிறவல் (Gravej) மூலம் நிரப்பி உரம் போடுதல் (மொங்கான்) வேண்டும்.
5. இடிபாடுகளை அகற்றி சுத்தப்படுத்திய பின் காணியினை மட்டப்படுத்தல்.

ஆ. இவ் இடித்தழித்தல் வேலைக்கான கூறுவிலை மேற்படி வேலைகள் அனைத்தையும் உள்ளடக்கி இருப்பதுடன் மொத்தக் கூறுவிலையின் பெறுமதி இடித்தழிப்பு வேலை ஆரம்பிப்பதற்கு முன் வங்கிக்கு செலுத்தப்படவேண்டும்.

இ. தெரிவு செய்யப்படும் இடித்தழிப்பு வேலைக்கான ஒப்பந்தக்காரர் மீளப்பெறக் கூடிய தொகையாக ரூபா.50,000/- வைப்பு பணம் செலுத்த வேண்டும். இப்பணம் இடித்தழிப்பு வேலை திருப்திகரமான முறையில் பூரணப்படுத்தப்பட்ட பின் விதிக்கப் படும்.

ஈ. இடிபாடுகள் எதுவும் காணியில் மீதமிருப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

உ. இடித்தழிக்கும் வேலை வங்கியின் உத்தியோகத்தர்கள் மேற்பார்வையில் நடைபெற வேண்டும்.

எ. வேலை நடைபெறும் போது அயலில் இணைந்திருக்கும் கட்டடங்களுக்கு சேதமேற்படாதவாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.


கூறுவிலைகள் யாவும் இலங்கை வங்கி நெல்லியடிக்கிளையில் உள்ள கூறு விலை கோரல் பெட்டியில் தங்கள் பெயர் முகவரி என்பவற்றுடன் ஒரு கடித உறையில் சீலிட்டு போடுதல் வேண்டும். கூறுவிலை கோரல் பெட்டி 10.03.2010 (புதன்கிழமை) மாலை 4.00மணிக்கு நெல்லியடி கிளையில் வைத்து திறக்கப்படும் கூறுவிலை கோருவதற்காக காணியைப் பார்வையிட வேண்டிய தேவையேற்படின் இலங்கை வங்கி நெல்லியடிக் கிளை முகாமையாளரை அலுவலக நேரத்தில் சென்று சந்திக்கவும்.

முகாமையாளர்,
இலங்கை வங்கி,
நெல்லியடி.


(சி/4525)









யாழ்.மாவட்ட செயலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள கணக்காய்வு தலைமைத் திணைக் களத்தின் உப அலுவலகம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் நா.சண்முகலிங்கன் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்துவைப்பதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கணக்காய்வின் தலைமை அதிபதி எஸ். சுவர்ணஜோதி மங்கல விளக்கேற்றுவதையும், யாழ்.கணக்காய்வு அத்தியட்சகர் பி.பற்குணம் வரவேற்புரை நிகழ்த்துவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# மாற்றுக் குரல்களை ஒடுக்கும் செயற்பாடு இன்னமும் தொடர்வதாய் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடந்த ஜனவரி மாதம் மஹிந்த ராஜபக்ஷ இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய போது மாற்றுக் கருத்துக்கொண்ட குரல்களை ஒடுக்குவது முடிவுக்கு வந்துவிடும் என தாம் நம்புவதாக ஊடக நிறுவனங்களும் மனித உரிமைக் குழுக்களும் தெரிவித்தன.

ஆனால் அவற்றின் நம்பிக்கை பலிக்கவில்லை என பி.பி.சி தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அதன் இணையத்தளம் வெளியிட்டுள்ள செய்தி ஆய்வொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்ற வேட்பாளரான ஜெனரல் சரத்பொன்சேகா அண்மையில் கைதுசெய்யப்பட்டதை சிலர் ராஜபக்ஷவின் எதிரணியினர் மீதான ஒடுக்கு முறையாக நோக்குகின்றனர்.

இலக்கு வைக்கப்பட்ட நபர்கள் தொடர்பான நீளும் பட்டியலில் ஜெனரலும் இணைந்துள்ளார் என்றே ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் காலத்தில் ஊடகச் செயற்பாட்டாளர்கள் மீதான குறிப்பாக ஜெனரல் பொன்சேகாவுக்கு ஆதரவான ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்கள் அதிகரித்திருந்ததை அவர்கள் அவதானித்தனர். இதுகுறித்து சில ஊடகவியலாளர்கள், உரிமை ஆர்வலர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். நாடாளுமன்றத் தேர்தலை எதிர்நோக்கியுள்ள சூழலில் இந் நிலைமை மேலும் மோசமடையலாம் என அவர்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

லண்டனைத் தளமாகக் கொண்ட சர்வதேச மன்னிப்புச் சபை அச்சுறுத்தலுக்குள்ளான ஊடகவியலாளர்களின் பட்டியலொன்றை தொகுத்துள்ளது.

ஜனாதிபதி ராஜபக்ஷவை விமர்சிப்பவர்களாக தென்பட்ட பலர் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டனர் என சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பசுபிக் பிராந்தியப் பணிப்பாளர் சாம் ஸரிபி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அச்சுறுத்தலை எதிர்நோக்கும் 56 ஊடகவியலாளர்களின் பட்டியலை நாம் தொகுத்துள்ளோம். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என சாம் ஸரிபி தெரிவித்துள்ளார்.

அரசமற்றும்தனியார் ஊடகங்களில் பணியாற்றுபவர்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிந்தவுடன் எதிர்க்கட்சி சார்பான லங்கா பத்திரிகை அலுவலகம் பொலிஸாரால் மூடப்பட்டது. அதன் ஆசிரியர் கைதுசெய்யப்பட்டு பல வாரங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

லங்கா நியூஸ் இணையத்தளம் தேர்தல் காலத்தில் அதிகாரிகளால் முடக்கப்பட்டிருந்ததாக அந்த இணையத்தளம் கூறுகிறது. ஆனால் அதை அரசாங்கம் மறுத்துள்ளது. அந்த இணையத்தளம் ஜனாதிபதித் தேர்தலுக்கு 2 நாட்களுக்கு முன்னர் காணாமல் போன தனது செய்தியாளர்களில் ஒருவரை இன்னும் தேடி வருகிறது.

கடந்த சில மாதங்களில் இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கத்தின் சிரேஷ்ட அங்கத்தவர்கள் உட்பட இலங்கை ஊடகவியலாளர்கள் பலர் அச்சம் காரணமாக நாட்டை விட்டுச் சென்றனர்.

அரச ஊடகங்களில் சில பிரச்சினைகள் இருப்பாக ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன ஒப்புக்கொண்டுள்ளார்.ஆனால் அவை தொழிற்சங்களுக்கிடையிலான பிரச்சினைகளே எனவும் அவை ஊடக சுதந்திரம் தொடர்பான பிரச்சினைகள் அல்ல எனவும் அவர் கூறுகிறார்.

ஆனால் இலங்கையின் மிகப் பெரிய ஊடகத்துறை தொழிற்சங்கம் இக்கருத்தை மறுத்துள்ளது.

ஜெனரல் சரத்பொன்சேகாவின் பிரசாரத்திற்கு உதவியாளர்களும் சுயாதீனமான ஊடகவியலாளர்களும் கூட இலக்குவைக்கப் படுவதாக ஊடக ஊழியர் தொழிற்சங்கத்தைச் சேர்ந்த தமர்சிறி லங்கா பேலி தெரிவித்துள்ளார். (2-6)

## ஆப்கான் குண்டுவெடிப்பு பான் கி மூன் கண்டனம்

ஆப்கானிஸ்தானில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களை, குறிப்பாக வெளிநாட்டினரை குறிவைத்து நடத்தப்பட்டுள்ள இந்தத் தாக்குதல் பயங்கரவாதிகள் மனித உயிரின் மகத்துவத்தை அறியாமல் செயல்படுவதையே திரும்பவும் வலியுறுத்துகிறது என அவர் தெரி வித்துள்ளார். (2-6)

## இந்திய கடல் எல்லைக்குள் இலங்கை மீனவர்கள் கைது

கடல் எல்லைதாண்டி இந்திய எல்லைக்குள் இலங்கை மீனவர்களின் படகு ஒன்று மீன்பிடித்துக் கொண்டிருந்தது. அதை இந்தியக் கடலோரக் காவல் படையினர் வழிமறித்து படகில் இருந்த இலங்கை மீனவர்களில் 6 பேரைப் பிடித்து சென்னைக்குக் கொண்டு சென்றனர்.

சென்னைக்குக் கொண்டு செல்லப்பட்ட மீனவர்கள் தற்போது பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். உரிய விசாரணை முடிந்ததும் அவர்கள் இலங்கைக்கு அனுப்பப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 6 மாதங்களில் மட்டுமே 74 இலங்கைப் படகுகளில் 384 பேர் இந்தியக் கடல் எல்லைக்கு வந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்துள்ளன. (2-6)

# சிசுதிரிய -புலமைப்பரிசில்தாரர்களை தெரிவுசெய்யும் நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

சிசுதிரிய- மாணவர் ஊக்குவிப்பு புலமைப் பரிசில் திட்டத்தின் தரம் -10 வகுப்புக்களில் இருந்து இந்த வருடத்திற்கான புலமைப் பரிசில்தாரர்களை தெரிவுசெய்யும் நடவடிக்கைகளை கல்வியமைச்சு தற்போது ஆரம்பித்துள்ளது.

வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக உதவும் நோக்கத்துடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் இடைநிலைக் கல்வியை நவீனமயப்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் இந்த புலமைப்பரிசில் கொடுப்பனவுத் திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு மாதாந்தம் 500 ரூபா வீதம் உதவித் தொகையாக வழங்கப்படவுள்ளது.

தரம் 9 வகுப்பின் இறுதியாண்டுப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட பெறுபேறுகளின் அடிப்படையிலும் இணைப்பாட விதான செயற்பாடுகளில் வெளிப்படுத்திய திறமைகள் மற்றும் குடும்பப் பொருளாதார நிலைமைகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டும் தகுதி யான மாணவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதுதொடர்பான விண்ணப்பங்கள் தற்போது வலயக்கல்வி அலுவலகங்கள் மூலமாக பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளன. தகுதியான மாணவர்கள் உரிய விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்பதாக சம்பந்தப்பட்ட வலயக் கல்வி அலுவலகங்களில் கையளிக்க வேண்டும் என்று செயற்திட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (2-6)

# பணத்தை வழிபடுவோர் சீனாவில் மிக அதிகம்

## ஆய்வொன்று தகவல்

(பீஜிங்)


உலகின் மற்ற எந்த நாட்டையும் விட சீனர்கள் பணத்தைக் கடவுளாக வழிபடுவதாக ஆய்வு முடிவு தெரிவிக்கிறது. பணம் இல்லாதவருக்கு மதிப்பில்லை. காசு இருந்தால்தான் மவுசு...இப்படி பணத்தின் அவசியம் குறித்து பல பாடல்கள், பழமொழிகள் உண்டு.ஆனால், சீனா அளவுக்கு வேறெ வரும் பணத்துக்கு அநியாய மரியாதை கொடுப்பதில்லை என்று ஆய்வில் தெரிய வந்துள்ளது.

சீனாவைச் சேர்ந்த இணையத்தளம் ஹாங்க்யூடொட் காம் அதன் சார்பில் பணத்தை தெய்வமாகவே மதித்துப் போற்றுவோர் அதிகமுள்ள நாடு எது என்று விரிவான ஆய்வு நடத்தப்பட்டது.

ஒன்லைன் மூலம் நடந்த ஆய்வில் உலகம் முழுவதிலும் இருந்து ஆயிரக் கணக்கானோர் தங்கள் கருத்துகளை பதிவு செய்திருந்தனர். அதன் அடிப்படையில் முடிவுகள், குளோபல் டைம்ஸ் நாளிதழில் வெளியிடப்பட்டன. பணத்தை கடவுளாகக் கருதி வழிபடுவோர் அதிகமுள்ள நாடு சீனா என்று அதில் அறிவிக்கப்பட்டது.

சீனர்களில் 85.7 சதவீதம் பேர் கரன்சி நோட்டைக் கடவுளாகக் கருதி வழிபடுகின்றனர். மீதமுள்ள 14.3 சதவீதம் பேர் மட்டுமே வாழ்க்கைக்கு பணம் அவசியம்தான். ஆனால் அதைக் கடவுளுக்கு நிகராக கருத முடியாது என்று பதிலளித்திருந்தனர்.

சீனாவின் சொத்து மதிப்புகள் வேகமாக அதிகரிப்பதால் வாங்கமுடியாமல் அடிமை வாழ்க்கை வாழவேண்டியுள்ளது என்றும் சிலர் கருத்து தெரிவித்திருந்தனர். (2-6)



# புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்

## நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வரின் அருள் ஆசிச்செய்தி



புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயம் இன்று தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். பல சிறப்புக்களைக் கொண்டது புங்குடுதீவு. நீண்ட கல்விப் பாரம்பரியத்தை பலதுறைகளிலும் வளர்த்துக் தந்த பெருமை தீவக மக்களை சாரும். இவ்வரிசையில் ஒழுக்கத்திற்கும் கல்விப் பாரம்பரியத்திற்கும் 100 ஆண்டுகள் பணியாற்றிய பெருமை இப்பாடாசாலையையே சாரும். பல இடர்பாடுகளுக்கும் சோதனைகளுக்கும் மத்தியில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் காட்டிய நூலின் நெறி நின்று 100 ஆண்டுகளைக் கடந்திருப்பது அனைவருக்கும் மகிழ்வைத் தருகின்றது.

100 ஆண்டுகள் இப்பாடசாலை தன்னிகரில்லா பணியாற்றியமையால் இந்நாட்டில் கல்வி வளர்ச்சியில் தனக்கொரு இடத்தை வகுத்துக் கொண்டது. இப்பணியை புனிதப் பணியாக செய்து வந்த அதிபர்கள், ஆசிரியர்கள் நன்றியுடன் வாழ்த் துதலுக்குரியவர்கள். இப்பணியில் இணைந்திருக்கும் அதிபர், ஆசிரியர்களை வாழ்த்திப் பாராட்டுகின்றோம். இன்று போல் இன்னும் பல்லாண்டு காலம் வளர்ச்சியடைந்து ஒழுக்கம் நிறைந்த மாணவ சமுதாயத்தை உருவாக்க இறைவன் ஆசீர் வதிப்பாராக.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சாரிய சுவாமிகள்

## பலநூற்றாண்டு பணி செய்ய வாழ்த்துகின்றேன்



யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயம் 2010 தனது நூாறாவது ஆண்டை நிறைவு செய்வதையிட்டு வெளியிடப்படும் நூற்றாண்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதிவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இப்பாடசாலையை ஆரம்பிப்பதற்கு மிகவும் கடினமாக உழைத்த சைவப்பெரியார் ஸ்ரீமான் பசுபதிப்பிள்ளையையும் அவருடன் இணைந்து செயற்பட்ட பெரியோர்களின் முயற்சிக்கும் தீர்க்க தரிசனத்திற்கும் தீவுப் பகுதியினர் என்றும் நன்றிகூறக் கடமைப் பட்டிருக்கின்றார்கள். இப்பாடசாலை தீவுப்பகுதியில் சைவவித் தியா விருத்திச் சங்கத்தினரால் ஏற்படுத்தப்பட்ட முன்னோடிக் கல்வி நிறுவனமாகும். இதனைத் தொடர்ந்து சைவவித்தியா விருத்திச் சங்கத்தினர் தீவகமெங்கும் பலசைவப் பாடசாலை களை நிறுவி கல்வி வளர்ச்சிக்கு வழிவகுத்தனர்.

1960 களிலிருந்து புங்குடுதீவு நடுத்தர வகுப்பினர் யாழ்ப்பாண நகருக்கு இடம்பெயர்ந்ததனாலும் 1991இல் புங்குடுதீவு மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்ததால் இப்பாடசாலையின் செயற்பாடு பெரிதும் பாதிக்கப்பட்டது. 1991-1996க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் இப்பாடசாலை யாழ்ப்பாணத்திலும் சிறுகாலம் தென்மராட்சியிலும் இயங்கவேண்டியதாயிற்று. 1991க்குப் பின்னர் 1996ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலேயே இப்பாடசாலை தனது சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியது.

100 ஆண்டைப் பூர்த்தி செய்து புதிய காலத்துக்குள் பிரவேசிக்கும் இப்பாடசாலையை மேலும் வளர்த்தெடுக்க வேண்டியது புங்குடுதீவு மக்களினதும் தீவுப்பகுதி மக்களினதும் கடமையாகும். புங்குடுதீவின் புனர்வாழ்வு, புனருத்தாரணம், வருங்கால அபிவிருத்தியாவற்றுக்கும் அடித்தளமாக அமைவது கல்வி நிறுவனங்களின் வளர்ச்சியாகும். இந்நிலையில் புங்குடுதீவின் வளர்ச்சியில் இக்கல்வி நிறுவனத்தின் வளர்ச்சியும் தொடர்புபடுகின்றது. இதனால் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், பாடசாலைச் சமூகம், புலம்பெயர்ந்த சமூகம் ஆகியன இணைந்து இப்பாடசாலையை கல்விப் பணியில் விளைதிறனானதும் வினைத்திறனானதுமான நிறுவனமாக வளர்த்தெடுப்போமாக.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர், முன்னாள் துணைவேந்தர்,
யாழ்- பல்கலைக்கழகம்.



## வாழ்த்துகின்றேன்

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய மூத்த தமிழே!
நீ என்றும் கன்னியாய் திகழ்ந்து வற்றாத ஊற்றாய் வளமான
விளைநிலமாய் தோன்றி இனிமையானவளாக உயிராக நின்றும்
உயிருடன் மெய் சேர்ந்தும் தேவை நோக்கி உருமலர்ச்சி
காட்டி நிற்கும் தமிழே! உனது இப்பெருமையைப் பறைசாற்றி
நிற்கும் எமது பாடசாலை - கணேசா மகாவித்தியாலயம்
நூற்றாண்டு விழா கண்டு மனம் பூரித்து நிற்கின்றேன்.
" தோற்றிற் புகழோடு தோன்றுக - அஃதிலர்
தோன்றலிற் தோன்றாமை நன்று"
எனும் வள்ளுவரின் வாக்கிற்கிணங்க புகழோடு விளங்கும்
புலமையாளர்களையும், புத்திஜீவிகளையும்
தந்து ஒரு சகாப்த சரித நிறைவை முடித்து நின்று
கொண்டிருக்கும் ஸ்ரீ கணேச மகாவித்தியாலய நூற்றாண்டு
விழாவில் பங்குகொள்வதிலும் பெருமையடைகின்றேன்.
தமிழ்த்தாயின் குழந்தைகள் நாம் தரணி போற்ற
உலகெங்கும் சிதறிக்கிடக்கின்றோம். ஆயினும்
இந்த நூற்றாண்டு விழாவில் நாம் ஒன்றிணைந்துவிட்டோம்.
நினைக்க உள்ளம் நெகிழ்கின்றது. நாளைய உலகின்
சரித்திரம் படைக்கப் போகும் எம் பாடசாலையின் நூற்றாண்டு விழா
பல்லாண்டு காலம் பல்லாயிரம் மாணவ மணிகளின் உயர்ச்சிக்கு
உறுதுணையாக அமையவும் அதன் எழுச்சிக்கு உந்து சக்தியாக
விளங்கவும்
என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
"கணேச சங்கமம்" வாழ்க வளமுடன்.

அருள்நிதி சி.முருகானந்தவேல்
நூற்றாண்டு விழாக்குழு பொருளாளர்.

## துணைவேந்தரின் வாழ்த்து



கல்வியே எங்களின் பெருஞ் சொத்தாகும். கல்வியெனும் வல்லமையாலேயே எங்களின் சமூக வரலாறும் பண்பாட்டு வாழ்வும் காக்கப்படுகின்றது. இந்த வகையில் எங்கள் பாரம்பரிய புலங்களின் ஒன்றான புங்குடுதீவில் விளங்கும் ஸ்ரீ கணேச மகாவித்தியாலயம் நூற்றாண்டு விழாக்காணும் செய்தி பெருமகிழ்ச்சி தருகின்றது.


அந்திய பண்பாட்டு ஆதிக்கங்களிடை சுதேச பண்பாட்டினை மீட்கும், காக்கும் நாவலர் பெருமானின் வழியில் புங்குடுதீவைச் சேர்ந்த சமூக, சமய உணர்வாளரான வ.பசுபதிப்பிள்ளை அவர்களின் அயரா முயற்சியால் சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் துணையுடன் ஆரம்பிக்கப்பெற்ற இந்தப் பாடசாலையின் தொடக்க வைபவத்தில் சைவ அறிஞர் திரு. சிவபாதசுந்தரனார், ஞானசித்தி பத்திராதிபர் திரு.சி. தாமோதரம்பிள்ளை போன்ற சான்றோர்கள் கலந்து ஆசிதந்த வரலாறு பெருமைக்குரியது.

தீவகத்தின் பாடாசலைகளில் பல காலம் ஆசிரியப் பணிபுரிந்த என் தந்தையாரின் வழியாக இப்புலங்களின் கல்விமான்கள் பலரை இளவயதிலேயே அறிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குப் கிடைத்தது. இடரினும் தளராத இக்கல்வியாளர்களின் அர்ப்பணிப்பினாலேயே ஸ்ரீகணேச மகாவித்தியாலயம் தான் சந்தித்த பின்னடைவுகளையும் தாண்டி இன்று நூற்றாண்டு விழாக் காண்கின்றது.

இன்றைய நூற்றாண்டுகால பெருமையுடன் வித்தியாலயத்தின் வளங்களைப் பெருக்குவதுடன் வித்தியாலய சமூகத்தின் வாழ்க்கை தரமேம்பாட்டுக்கான திட்டங்களையும் வகுத்துச் செயற்படுத்தல் இன்றியமையாதது. இந்த பெரும்பணியில் உழைக்கின்ற வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாக் குழுவினருக்கும் ஏனைய பாடசாலை சமூகத்தினருக்கும் என் அன்பான வாழ்த்துக்கள்.

பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன்
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமையட்டும்



'கன்னலொடு செந்நெல்விளை
பொன்னகர்
தன்னிலுறை கண்ணகிக் கற்பரசியே'

என்று பாடினார் வரகவி முத்துக்குமாருப் புலவர். புலவர் பலரும் போற்றும் புங்குடுதீவு, கண்ணகிக் கற்பரசி, கடல் பல கடந்து வந்தணைந்து கோவில் கொண்ட திருப்பதியாகும். இத் திரு வரலாற்றுப் பெருமைமிகு புங்குடுதீவில் செந்தமிழும் சிவநெறியும் செழித் தோங்க வேண்டுமென்னும் பெருவிருப்புடன் சைவப் பெருமக்கள் பலரதும் ஒத்துழைப்புடன் 03.03.1910இல் சைவப் பெரியார் அமரர் வ.பசுபதிப்பிள்ளையின் பெருமுயற்சியினால் உருவானதே புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயமாகும்.

புங்குடுதீவின் கலைக்கூடமாக, நாடு போற்றும் நல்லாசான்களையும், பொறியியலாளர்களையும், மருத்துவர்களையும், சட்டத்தரணிகளையும், எழுத்தாளர்களையும் இசை வல்லுநர்களையும் உருவாக்கிய பெருமைக்குரியதாக இது விளங்குகின்றது. இங்கு கல்வி பயின்றோர் இன்று உலகளாவிய ரீதியில் பேரோடும் புகழோடும் திகழ்கின்றனர். அவர்களனைவரும் இன்று தங்களுக்கு எழுத்தறிவித்த கணேச வித்தியாலயத்தை நன்றியுடன் நினைவு கூர்ந்து வாழ்த்திகின்றனர்.

கடந்த நூற்றாண்டுகளாக அனைத்து மாணவர்க்கும் பாகுபாடு எதுவுமின்றிக் கல்விப் பணிசெய்த இவ்வித்தியாலயம் தான்தோன்றிய திகதியிலேயே தனது நூற்றாண்டு நிறைவைக் கொண்டாடுவது பெருமகிழ்ச்சிக்குரியதாகும். நூற்றாண்டுகால வரலாற்றில் மட்டுமன்றிப் புங்குடுதீவின் வரலாற்றிலேயே இந்நூற்றாண்டு விழா புதியதோர் திருப்புமுனையாக அமையுமென எதிர்பார்க்கின்றோம். இவ்விழாவைச் சிறப்புற நடத்துவதற்கு அனைத்து உதவிகளையும் வழங்கி வரும் பழைய மாணவர்களையும் நூற்றாண்டு விழாக் குழுவினரையும் வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் இவ்வேளையில் நன்றியுடன் நினைவு கூர்ந்து வாழ்த்துகின்றேன்.

புங்குடுதீவில் முதன் முதலில் தோன்றிய சைவப் பாடசாலை என்ற வகையிலும் பல்லாயிரம் மாணவர்களுக்குப் பயன்தரும் பயிற்சிகள் அளித்து அவர்கள் தம் சீரிய வாழ்விற்குச் சிறப்புற வழிகாட்டிய கல்விக்கூடம் என்ற முறையிலும் இதன் பணிகள் என்றும் நினைவு கூறத்தக்கன என்றாலது மிகையல்ல.

நூறு ஆண்டுகளைக் கடந்து நிற்கும் இவ்வித்தியாலயத்தின் முன்னாள் அதிபரென்ற வகையிலும் நூற்றாண்டு விழாக்குழுத் தலைவரென்ற முறையிலும் இவ்விழாக்காண வாரீர் வாரீரென அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன். 'கணேச சங்கமம்' புங்குடுதீவின் வரலாற்றில் புதியதோர் திருப்பத்தை உருவாக்குவதாக! 'கணேச தீபம்' ஒளிவிட்டுப் பிரகாசிப்பதாக! நிறைந்த மனதுடன் வாழ்க! வாழ்கவென இவற்றை வாழ்த்துவோமாக!


த.துரைசிங்கம்
(நூற்றாண்டு விழாக் குழுத் தலைவர்)

## 03.03

### யா/புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா

செந்தமிழும் சிவசெறியும் தழைத்தோங்கும் நோக்குடன் புங்குடுதீ
முதன் முதலாக அமைக்கப்பட்ட சைவப்பாடசாலை ஸ்ரீ கணேச வித்தி
லயமாகும். 03.03.1910 இல் தோன்றிய இவ்வித்தியாலயம் தான் தே
றிய தினத்திலேயே தன் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறது. புங்கு
வில் உள்ள சைவப்பெருமக்களின் உதவியுடன் இவ்வித்தியாலயத்
பேணிக்காத்தவர் அமரர் வ.பசுபதிப்பிள்ளை ஆவார்.

1910 இல் தோன்றிய இப்பாடசாலை 1914 வரை அரசினரின்
கொடைப் பண உதவி எதுவுமின்றி முகாமையாளரினதும் பொதுமக்க
னதும் உதவியுடன் இயங்கியது. 10.08.1914 இல் அரசினர் நன்கொ
உதவிகொட்டை உதவிபெறும் பாடசாலையாகப் பதிவு பெற்றது. 192



அமரர்

ஆண்டில் உயர்தர வகுப்புக்களைக் கொண்ட மத்திய பாடசாலையாக உயர்வு பெற்றது. 1936ஆம் ஆண்டில் இவ்வித்தியாலயம் சிரேஷ்ட உயர்நிலைப் பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டது.

1940 ஆம் ஆண்டு இவ்வித்தியாலயப் பழைய மாவர் சங்க விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ள வருகை தந்த வித்தியாதிபதி எல்.எம்.டி. றொபின்சன் அவர்களிடம் புங்குடுதீவிற்கு ஒரு ஆங்கிலப் பாடசாலை வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதன்பேறாக இந்நாட்டு கல்வி அமைச்சர் சி.டபிள்யூ.கன்னங்கரா, சபாநாயகர் சேர். வை. துரைசுவாமி ஆகியோரின் விதப்புரையின் பேரில் புங்குடுதீவு மகாவித்தியாலயம் இப்பாடசாலை வளாகத்திலே 16.01.1946 இல் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பல சாதனைகளை நிலைநாட்டிய ஸ்ரீ கணேச வித்தியாலயம் 05.02.1980இல் கல்வியமைச்சினால் மகாவித்தியாலயமாகத் தரம் உயர்த்தரப்பட்டதுடன் க.பொ.த.உயர்தர கலை வகுப்புகளை நடத்தும் அங்கீ
காரத்தையும் பெற்றது. கடந்த நூறு ஆண்டுகளில் 12 அதிபர்கள் இ
பணியாற்றியுள்ளனர். அவர்களாற்றிய சேவைகள் காலத்தால் மற
முடியாதவையாகும்.

இவ்வித்தியாலயத்தின் முதற் தலைமையாசிரியர் வேலணையூரவர
பெரியர் கா.நமசிவாயம்பிள்ளையாவார். இவரே பண்ணோடு திருமு
களை ஓதும் பழக்கத்தை இங்கு ஏற்படுத்தியவர் எனலாம். இவரின்
பேராசிரியர் சி.இ.சதாசிவம்பிள்ளை, க.செல்லத்துரை, வை.கந்தையா,
கார்த்திகேசு, சோ.சேனாதிராசா, த.துரைசிங்கம், கே.ரி.தர்மலிங்
எஸ்.அமிர்தலிங்கம், செ.ஈஸ்வரமூர்த்தி, ச.சதாசிவம் ஆகியோர் அதிபர்க
கக் கடமையாற்றியுள்ளனர். தற்போது எஸ்.கே.சண்முகலிங்கம் அதிப
உள்ளார்.

புங்குடுதீவின் கலைக்கூடமெனப் போற்றப்பெறும் இவ்வித்தியால
தின் முகாமையாளராக அமரர் வ.பசுபதிப்பிள்ளை 1910 முதல் 1954வ
பணியாற்றினார். இவரின் பின் விதானையார் க.மு. சின்னத்துரை 195
1957 வரை கடமையாற்றினார். இவரின் மறைவையடுத்து திரு
தையல்நாயகி கதிரவேலு 1957 முதல் 30.04.1962
முகாமையாளராக செயலாற்றினார்.

அதன் பின்னர் இவ்வித்தியாலயத்தை அரசு தனதுடமை ஆக்
கொண்டது. ஸ்தாபகரான அமரர் பசுபதிப்பிள்ளையும் முகாமையாளர்க
இவ்வித்தியாலயத்தைப் பேணி வளர்ப்பதில் தம்மை அர்ப்பணித்
பணியாற்றினர் என்றால் அது மிகையல்ல.

அரசு இவ்வித்தியாலயத்தைக் கையேற்றதன் பின்னர் இதன் பௌ
வளங்கள் பெருகின. மாடிக்கட்டடம் உட்படச் சில கட்டடங்கள் அமைக்கப்
டன. பெற்றோர், ஆசிரியர் சங்கத்தின் பெருமுயற்சியால் 8 பரப்புக் கா



# ...த்தியாலயம் நூற்றாண்டுவிழா சிறப்பிதழ்



## ...03.2010

## ...காவித்தியாலயம் ஒரு வரலாற்று நோக்கு

வாங்கப்பெற்றுப் பாடசாலைக்கு வழங்கப்பட்டது. இவ்வித்தியாலயத்தின வளர்ச்சிக்குப் பழைய மாணவர் சங்கம் ஆற்றியுள்ள பணிகள் அளப்பரியன.

1925ஆம் ஆண்டில் பேராசிரியர் சி.இ.சதாசிவம்பிள்ளை தலைமையில் உருவான இச்சங்கம் 1951 இல் தனது வெள்ளிவிழாவைக் கோலாகலமாக நடத்தியேதோடு வெள்ளிவிழா மலர் ஒன்றையும் வெளியிட்டது. பொன்விழா, மணிவிழா, பவளவிழா, கண்ட இச்சங்கத்தினரே இவ் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவையும் நடாத்துகின்றனர்.

புங்குடுதீவின் புகழை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பரப்பிய பெருமை இவ்வித்தியாலயத்தின் பழைய மாணவர்களுக்கே உண்டு. மலேசியாவில் வாழ்ந்த மாணவர்கள் 1925இல் நிதி திரட்டி வெள்ளிப்பிள்ளையார் ஒன்றை அன்பளிப்புச் செய்தமை மறக்க முடியாத நிகழ்வா கும். இவ் வெள்ளிப்பிள்ளையார் இன்று அதிபர் அலுவலகத்தில் காட்சி அளித்துக் கொண்டிருக்கிறார்.



நிறுவனர்
...மரர் வ.பசுபதிப்பிள்ளை

இவ்வித்தியாலயத்தின் நூலக கட்டடத்தைப் பழைய மாணவரான நா.சுப்பிரமணியம் தமது தாயார் திருமதி சின்னம்மா நாகலிங்கம் நினைவாக அமைத்துக் கொடுத்துள்ளார்.

அமரர் நீ.மு.குமாரசாமி இவ்வித்தியாலயத்தில் உள்ள சிறிய ஆலயத்தைத் தமது செலவில் கட்டிக் கொடுத்தமையும் இங்கு குறிப்பிடத்ததக்கது. காலத்துக்குக் காலம் பெற்றோர், பழையமாணவர், நலன் விரும்பிகள் மனமுவந்து இவ்வித்தியாலயத்தின் தேகைகளை நிறைவேற்றி வந்துள்ளனர்.

1990-1995 காலப்பகுதியில் இடம்பெற்ற இடப்பெயர்வினால் இவ்வித்தியாலயம் பாதிக்கப்பட்டதெனினும் சோதனைகளையும் சாதனைகளாக மாற்றி மீள இயங்க ஆரம்பித்தது. 'கல்வி அழகே அழகு' என்னும் மகுட வாச கத்திற்கு ஏற்ப கல்வி யளிப்பதையே இலட்சியமாகக் கொண்டு துடிப்புடன் பணியாற்றி வருகிறது. நுற்றாண்டு விழா இதன் வளர்ச்சிக்கு உந்துதலளிப் பதோடு வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகவும் அமையுமென எதிர்பார்க் கிறோம். நூற்றாண்டு விழாக்காணும் இவ்வேளையில் இவ்வித்தியாலயத் திற்கு வருகைதந்து பெருமக்களையும் அருளாளர்களையும் ஒருகணம் நினைத்துப் பார்த்தல் ஏற்புடையதாகும்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர், சுவாமி உருத்திர கோடீஸ்வரர், கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார், சபாநாயகர் சேர் வை.துரைசுவாமி, சர்வோதய சிரமதான இயக்கத் தலைவர் ஏ.ரி.ஆரியரத்தினா, இலங்கை ...தியாதிபதி எல்.எம்.டி.றொபின்சன் (1940இல்), பிரதிக் கல்விமா அதிபதி கே.எஸ். அருணந்தி, முகாந்திரம் தி.சதாசிவ ஐயர், பிரதிக் கல்வி மாஅதிபர் யூ.டி.ஐ.சிறிசேனா, கல்விப் பணிப்பாளர் ஷேர்லிங் பெரேரா, கல்வி அமைச்சர்களான ஈ.ஏ.நுகவெல, பி.ஜி.பி.கலுகல்ல ஆகியோர் இவ் வித்தியாலயத்தைத் தரிசித்து வாழ்த்திச் சென்றமை நினைவைவிட்டு நீங்கா நிகழ்வுகளாகும்.

கற்றோரும் மற்றோரும் போற்றிடும் கணேச வித்தியாலயம் (03.03.2010) இல் தனது நூற்றாண்டு விழாவைக் 'கணேச சங்கமம்' என்னும் பெயரில் நடத்துவதோடு 'கணேச தீபம்' என்னும் நுற்றாண்டு மலரையும் வெளியிடுகிறது.

தமிழகத்தின் பிரபல பேச்சாளர் சொல்வேந்தர் சுகிசிவம் இவ்விழாவில் கலந்து கொண்டு பேருரையாற்றுகிறார். புங்குடுதீவு கண்ணகியம்மன் ஆலய முன்றலில் 1954 சித்திரைத் திங்களில் நடைபெற்ற சிலப்பதிகார விழாவையடுத்து நிகழும் பெரு விழாவாக இந்நூற்றாண்டு விழா அமைகிறது.



## அரசாங்க அதிபரின்வாழ்த்துச் செய்தி



'கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடல்ல மற்றையவை'

உலகில் எந்தவொரு நாட்டின் விழுமைக்கும் பண்பாட்டுப் பாரம்பரியச் சிறப்புக்களுக்கும் அளவுகோலாய் அமைவது கல்வியேயாகும். கல்வியைக் கண்ணெனப் போற்றும் யாழ் மண்ணில் கல்வியின் வரலாறு திண்ணைகளிலேயே தொடங்கியது. இவ்வழியில் நூற்றாண்டு காணும் யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம் தனது வரலாற்றில் பல படிகளைக் கடந்து இன்று மகாவித்தியாலயமாய் மலர்ந்துள்ளது.

கசடறக் கற்று, கற்றவழி நிற்கும் ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டுமெனும் கல்வியின் நோக்கம் யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தினால் செவ்வனே நிறைவேற்றப் பட்டுள்ளது. இப்பள்ளியில் படிப்போடு புகட்டப்பட பண்புகள் புங்குடுதீவு மக்களிடையே பண்பாடாய் பிரதிபலித்தன.

ஆரம்ப நாளில் பல அல்லல்கள் மத்தியில் தளராது நின்று தனிச் சிறப்புடன் வளர்ந்த யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயம் அண்மையில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளின் பின்னரும் இத்தகையதொரு எழுச்சியுடன் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடல் பெருமைக்குரியதாகும். இம் மகாவித்தியாலயம் சகல வளங்களையும் நலன்களையும் பெற்று நவீன தொழில்நுட்பத்தின் துணையோடு மாணவரின் அறிவுச் செல்வத்தைப் பெருக்கி வளர்பிறையென வளர்ந்திட இந் நூற்றாண்டு நிளைவு நாளில் மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

க.கணேஷ்
அரசாங்க அதிபர், யாழ்-மாவட்டம்.

## மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்து



யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவையொட்டி வெளியிடப்படுகின்ற நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வெய்துகின்றேன்.

யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம் தீவக வலயத்தில் உள்ள முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாகும். கற்றல், கற்பித்தல் செயற்பாடு மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் ஊடாக, பாடசாலையின் பண்புசார் கட்டியையும் தரத்தையும் பாடசாலை சமூகத்தினர் உயர்நிலையில் பேணிவருவது போற்றப்பட வேண்டியது. இடம்பெயர்ந்த நிலையிலும் தனது பெயரை நிலைநிறுத்தியது மட்டுமன்றி இன்னும் இப்பாடசாலையானது வீறுகொண்ட தனது பயணத்தை தொடர்ந்து வருவதை சான்றா தாரங்கள் வெளிப்படுத்துகின்றன.

இத்தகைய செயற்பாடுகளுக்கு காரணமாக விளங்குகின்ற பாடசாலையின் அதிபர், ஆசிரியர் குழாத்தினர் மற்றும் பாடசாலை சார்ந்த சமூகத்தினரின் பங்களிப்பு பாராட்டுதற்குரியது. மேலும் பல கல்விமான்கள் உருவாகுவதற்கு அடித்தளமிட்டு தன்பெயரை பொலிவுடன் புகழ்மணம் பரப்புகின்ற சிறப்பும் கொண்டது எனக் கூறுவது பெருமைக்குரியதாகும்.

எனவே பாடசாலை தன் கல்விப் பயணத்தை தொடர்ந்து செய்வதோடு இனிவரும் காலங்களில் மேலும் உயர்தரப் பெறுபேறுகள் ஊடாக நல்ல சமூகத்தினரை உருவாக்க வேண்டும் என்ற அவாவில் நூற்றாண்டு விழாவையொட்டி வெளியிடப்படுகின்ற சிறப்பு மலர் சிறப்புற வெளிவர எனது நல்லாசிகள்.

வீ.இராசையா,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடமாகாணம்.

## வித்தியாலய அதிபரின் வாழ்த்து



புங்குடுதீவு முதன் முதலில் தோன்றிய சைவ வித்தியாலயம் என்ற பெருமைக்குரியது ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம். சைவ மும் தமிழும் தனது இரு கண்களாகக் கொண்டு கடந்த 100 ஆண்டுகளாக அறிவொளியூட்டிய இக் கல்விக் கூடம் தனது நூற்றாண்டு விழாவை வெகுசிறப்புடன் கொண்டாடுவது குறித்துப் பெரு ம்கிழ்வுறுகிறேன்.

'கணேச சங்கமம்' என்னும் பெயரில் இடம்பெறும் இந்த நிகழ்வில் 'கணேச தீபம்' என்னும் நூற்றாண்டு மலரும் வெளியிடப்பட விருப்பது அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துமெனத் திடமாக நம்புகிறேன். இந் நூற்றாண்டு விழாவைச் சிறப்புற நடத்தும் விழாக்குழுவின ருக்கும், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும் பிகள் அனைவ ருக்கும் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். எஸ்.கே.சண்முகலிங்கம், அதிபர்.

## கணேசாவின் கல்விப் பாரம்பரியம் தொடரட்டும்



ஸ்ரீகணேச மகா வித்தியாலயம் ஸ்தாபிக்கப்பட்டு நூற்றாண் டினைக் கடந்து சாதனைகள் பலவற்றை உருவாக்கி அடுத்த நூற்றாண்டில்காலடி எடுத்து வைப்பதையிட்டு பெருமகிழ்வு கொள்கிறேன்.

சைவத்தமிழ் மாணவர்களின் கல்வி மேம்பாட்டினைக் கருத்திற் கொண்டு சைவப் பெரியார் அமரர் வ.பசுபதிப்பிள்ளை அவர்களின் தீர்க்க தரிசனத்தினூடாக உருவான இப்பாடசாலையானது இக்கிராம மக்களின் கல்வி மேம்பாட்டுக்கும் பொருளாதார சமூக வளர்ச்சிக்கும் பெரிதும் உழைத்துள்ளதைக் கடந்த அரை நூற்றாண்டுகாலமாக நேரில் அவ தானித்துள்ளேன். இங்கு கல்வி கற்ற மாணவர்கள் உள்நாட்டிலும் சர்வதேசங்களிலும் புகழுடன் வாழ்கின்றனர். அவர்களது பெருமுயற்சியி னால் கொண்டாடப்படும் நூற்றாண்டு விழா சிறப்புறவும் அதனையொட்டி வெளியிடப் படும் 'கணேச தீபம்' நூற்றாண்டு சிறப்புமலர் அடுத்த நூற் றாண்டு இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமையவும் எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேராசிரியர் கா.குகபாலன்
தலைவர், புவியியற்துறை,
யாழ். பல்கலைகழககம்.

## செயலாளரின் வாழ்த்துச் செய்தி



யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியா சாலை நூற்றூண்டு கால கல்விச் சேவையை வழங்கி இறும்பூதெய்துகிறது. சைவத் தமிழ் பண்பாட்டிற்கமைய புங்குடுதீவுப் பகுதிச் சிறார்களுக்கு உயர்ந்த விழுமியங்களைக் கொண்டகல்வியைவழங்கிபலரையும்ஆளாக்கி வைத்த பெருமையைக் கொண்டுள்ளது.

சமூகத்தில் பல்வேறு தலைமைத்துவப் பண்பையும் ஒரு நடுநாயகமான நிலையையும் இவ்வித்தியா சாலை கொண்டுள்ளது.

உயர்ந்த கல்விப் பாரம்பரியத்தைக் கொண்டு இடைநிலை வகுப்பு வரையும் கல்வியோடு இதர புற கல்விச் செயற்பாட்டுத் திட்டங்களையும் முன்னெடுத்த பெருமை இப்பாடசாலைக்கு உண்டு. இடம்பெயர்வின் போது சிறிது நலிவடைந்திருந்தாலும் மீண்டும் மீண்டும் தழைத்து முன்நோக்கிச் செல்லும் போக்குடையதாக இருக்கின்றது.

எனவே எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு சமூகத்தினரின் ஒத்துழைப்பும் ஈடுபாடும் வேண்டப்படுகிறது. நூற்றாண்டு மலரை உருவாக்கி அச்சேற்றி வரலாற்று ஆவணமாக்கிய அதிபர், ஆசிரியர், பழையமாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் போற்றுதற்குரியவர்கள். நூற்றாண்டு விழாவும் மலர் வெளியீட்டு விழாவும் சிறப்புற என் இதயங் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

இ.இளங்கோவன், செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு,
வடமாகாணம்.

## வாழ்த்துகின்றேன்



புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவையொட்டி வெளியிடப்படும் நூற்றாண்டு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வெய்துகின்றேன்.

1910ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் மூன்றாம் நாள் உதயமான இவ்வித்தியாலயம் பல சகாப்தங்களாக புங்குடுதீவு வாழ் மக்களின் அபிலாசையைப் பூர்த்தி செய்யும் வகையில் பெரும் பணியாற்றியுள்ளது.

புங்குடுதீவில் முதற் சைவக் கல்விக் கூடமாகத் தோற்றுவிக்கப்பட்ட இவ்வித்தியாலயம் இந்நாட்டிலும் கடல்கடந்த நாடுகளிலும் பெரும் சிறப்புடன் வாழும் அறிஞர்களையும் செல்வந்தர்களையும் தோற்றுவித்துள்ளமை பெருமைக்குரியது.

1990ஆம் ஆண்டிற்கு முன்னர் சிறப்புற இயங்கிய இவ் வித்தியாலயம் நாட்டில் ஏற்பட்ட போர்சூழல், பாரிய இடப்பெயர்வு காரணமாக நலிவுற்றபோதிலும் தளராது மீண்டும் தழைத்து சிறப்புற இயங்கி வருகின்றமை பாராட்டுக்குரியது. இப்பாடசாலையின் வளர்ச்சியில் பழைய மாணவர் சங்கமும் பாடசாலை அபிவிருத்தி சங்கமும் பெரும் பங்காற்றி வருகின்றமை சிறப்பிற்குரியது.

இவ்வித்தியாலயத்தின் சேவை பல்கிப் பெருக வேண்டுமென வாழ்த்துவதுடன் இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து வரும் அதிபரையும் அவருக்கு உறுதுணையாக இருந்து அர்ப்பணிப்புடன் சேவையாற்றிவரும் ஆசிரியர்களையும் பாராட்டுவதுடன் நூற்றாண்டு மலர் சிறக்க இறையாசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

வ.இராதாகிருஷ்ணன்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
தீவகம், வேலணை.

## கல்விப் பாரம்பரியத்தின் முன்னோடிக் கல்வி நிறுவனம்



புங்குடுதீவு வாழ் மக்களின் கல்விப் பாரம்பரியத்தினை முன்னெடுத்துச் செய்வதில் கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக பெரும் பங்காற்றிவரும் ஸ்ரீகணேச மகாவித்தியாலத்தின் நூற்றாண்டு விழா சிறப்புற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். 1991-1996ஆம் ஆண்டு வரை இக் கிராமத்தில் உள்ள பாடசாலைகள் யாவும் இடம்பெயர்ந்திருந்த போதிலும் மீள் இடப்பெயர்வின் போது மீளத் திறக்கப்பட்ட ஐந்து பாடசாலைகளில் இதுவும் ஒன்று.

எனினும் இடம்பெயர்ந்த மக்களில் பெரும்பாலானோர் மீள் இடப்பெயர்வினை மேற்கொள்ளாவிடினும் தாம் கற்ற பாடசாலையின் பொருமையினை நினைவு கூரும் முகமாக ஒன்று சேர்ந்து நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுவதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இப் பாடசாலை மேலும் மேலும் வளர்ச்சிபெற்று எதிர்கால சந்ததியினருக்கு சேவை செய்ய வேண்டுமென மனதார வாழ்த்துக்கின்றேன்.

எம்.நந்தகோபாலன்
பிரதேசசெயலர்
வேலணை.

## கணேச சங்கமம் சேர்ந்திடுவோம்

புங்கை நகரின் புகழ் எங்கும் பரவிட - நாம்
புதிய வரலாறு படைத்திடுவோம்
தங்கு தடையின்றிக் கல்வி வளம்பெற - நாம்
தக்கன யாவும் செய்திடுவோம்.

"கல்வி அழகே அழகென்று" கண்டவர் -நம்
கண்ணியம் மிக்க பசுபதியார்
பல்கிப் பல வளம் பெருகிடவே -அவர்
பாதையடி ஒற்றிச் சென்றிடுவோம்.

கற்று உயர்ந்த மாணவர் யாவரும் -இன்றே
கணேச சங்கமம் சேர்ந்திடுவோம்
தக்க பணிகள் பல செய்திடவே -நாமும்
தளராது உறுதி பூண்டிடுவோம்

கணேச சங்கமம் சிறந்திடவே - நம்
கலைகள் யாவும் வளர்ந்திடவே
கற்றவர் யாவரும் ஒன்று கூடிடுவோம் -நம்
கணேச வித்தியாலயத்தை வாழ்த்திடுவோம்

"புங்கையூரான்"

# சிலியில் பூகம்பம்! பேரழிவு! 300க்கும் மேற்பட்டோர் பலி


தென்அமெரிக்கா கண்டத்திலுள்ள க்கடற்கரை நாடான சிலியை நேற்று தாக்கிய பயங்கர நில நடுக்கம் அந் நாட்டில் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது.

சிலி நாட்டு நேரப்படி அதிகாலை 3.45 மணிக்கு இந்த பயங்கர நிலநடுக்கம் தாக்கியுள்ளது. சிலி நாட்டுத் தலைநகர் சாண்டியாகோவிற்குப் பிறகு அந்நாட்டின் இரண்டாவது மிகப் பெரிய நகரான கான்செப் சியானில் இருந்து 115 கி.மீ. தூரத்தில் கடற்பகுதியில் மையங்கொண்டு இந்த பயங்கர நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

ரிக்டர் அளவுகோலில் 8.8.புள்ளியாக பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கம் சிலி நாட்டில் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது. இது வரை கிடைத்த தகவலின்படி 300 பேர் உயிரிழந்துள்ளனர். நில நடுக்கத்தால் உருவான ஆழிப்பேரலை (சுனாமி) 9 அடி உயரத்திற்குக் கிளம்பி சிலி நாட்டைத் தாக்கியதாக பசுபிக் பெருங்கடலிலுள்ள சுனாமிஎச்சரிக்கை மையம் கூறியுள்ளது.

ஆனால் ஆழிப்பேரலை 40 மீட்டர் உயரத்திற்கு எழும்பி தாக்கியிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று புவியியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். பூகம்பம் ஏற்பட்ட இடத்திலிருந்து நேர் கிழக்காக சிலியின் கடலோரம் அமைந்துள்ள மாலே எனும் சிறு நகரத்தில் நிகழ்ந்த பூமி அதிர்வில் 2 இரண்டு மில்லியனுக்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.





2004ஆம் ஆண்டு இந்தோனேஷியாவின் சுமாத்ரா தீவுகளுக்கு அருகே ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 8.9ஆக பதிவாகியிருந்தது. அதைவிட ஒரே ஒரு புள்ளி மட்டுமே குறைவாக இந்த பூகம்பம் ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்தோனேஷிய பூகம்பத்தில் மூன்றரை இலட்சம் பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்ககதாகும். (2- 6)

## அம்பாந்தோட்டையில் பிரசார நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடும் நாமல் ராஜபக்ஷ தனது தேர்தல் பிரசார நடவடிக்கைகளை பால்சோறு இரத்ததான நிகழ்வுகள் மூலம் ஆரம்பித்தார்.

இந் நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அவர் பால்சோறு ஊட்டினார். அவரது தாயார் முதற்பெண்மணி சிராந்தி ராஜபக்ஷவும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார். (2-6)

## தங்க பிரேதப்பெட்டி விலை ரூ.1.75 கோடி

(வெரோனா)

பொருளாதார நெருக்கடி ஒருபுறம் இருந்தாலும் ஆடம்பர பொருட்களுக்கான மவுசோ மதிப்போ குறையவில்லை. ஆம், தங் கத்தால் ஆன பிரேதப்பெட்டி ரூ. 1.75 கோடிக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இத்தாலியின் வெரோனா நகரில் சர்வ தேச ஆடம்பர பொருட்கள் கண்காட்சி நடைபெறுகிறது.

இதில் தங்கத்தாலான பிரேதப்பெட்டி இடம் பெற்றுள்ளது. இதன் விலை ரூ.1.75 கோடி. வைரக் கற்கள் பாதிக்கப்பட்ட பிரான்ஸ் நாகரீக திருமண உடையும் இந்த கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இதன் விலை ரூ.1.38 கோடி.ஸ்போர்ட்ஸ் கார்விலை ரூ.8.19 கோடி. (2-6)

## என்னை கண்டிக்கு வரவேண்டாம் என்று கூற நாடு பிரிந்துள்ளதா? -மனோகணேசன் கேள்வி

(கொழும்பு)

கண்டிக்கு வரவேண்டாம் என்று சொல்லும் ஹெல உறுமய கட்சியின் கோஷம் இந்த நாடு பிளவுபடவில்லை என்ற வாதத்திற்கு எதிரானதாகக் காணப்படுகிறது என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

கண்டி மாவட்டம் ஹெல உறுமயவுக்கு மாத்திரம் உரியது என அவர்கள் கூறுவதனால் இந்த நாடு பிரிந்துள்ளது என்ற அச்சத்தை அது உருவாக்குகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கண்டி மாவட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சியின் யானைச் சின்னத்தின் கீழ் போட்டியிடுகின்றமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றுமுன்தினம் ஜாதிக ஹெல உறுமய கட்சியினர் மனோகணேசன் கண்டிக்கு வர வேண்டாம் எனக் கூறி ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டனர். அதற்கு கருத்து தெரிவித்துள்ளபோதே மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் கொழும்பிலிருந்து கண்டிக்கு வந்தவன் அல்ல. கண்டியிலிருந்து கொழும்புக்கு வந்து மீண்டும் . கண்டிக்கு வந்துள்ளேன். எனது தந்தை அம்பிட்டிய என்ற ஊரைச் சேர்ந்தவர் . நான் கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரியில் கல்வி கற்றவன். என்னை கண்டிக்கு வரவேண்டாம் என்று அவர்கள் கூறுவதனால் நாடு (இலங்கை) பிரிந்துள்ளது என்ற அச்சத்தை உருவாக்குகின்றது என்றார்.

அத்துடன் இலவசமாக தனக்கு எதிரான பிரசாரம் மேற்கொள்கின்றமைக்காக ஹெல உறுமய கட்சியினருக்கு தாம் நன்றி கூறுவதாகவும் மனோகணேசன் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

## யாழில் காணியின் விலைகள் உயர்வு -ரிவிர செய்தி

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கு அதிகளவில் தெற்கு மக்கள் வருவதால் இங்கு காணிகளின் விலை உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. யாழ்.நகரப் பிரதேசத்தில் ஒரு பேர்ச் காணியின் விலை 4 இலட்சம் ரூபா வரை விற்கப்படுவதாக ரிவிர பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

யுத்தம் காரணமாக கொழும்பு, வெள்ளவத்தை , கொட்டாஞ்சேனைப் பகுதிகளில் தொடர்மாடிகளில் குடியிருந்தவர்கள் சொந்த இடங்களுக்கு திரும்புவதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் கடந்த சில வாரங்களில் கொழும்பைச் சேர்ந்த 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் நல்லூர் பிரதேசத்தில் குடியேறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய மக்கள் வெள்ளவத்தை , கொட்டாஞ்சேனைப் பகுதி வங்கிகளில் வைத்திருந்த கணக்குகளை யாழ்ப்பாண கிளைகளுக்கு மாற்றிக்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் புலம்பெயர்ந்து சென்று ஐரோப்பிய நாடுகளில் வாழும் யாழ்ப்பாண மக்கள் காணிகளைக்கொள்வனவு செய்வதில் நாட்டம் காட்டி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

## பாதுகாப்பு ஏற்பாடுகளில் பாரபட்சம் குற்றம் சாட்டுகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பில் எதிர்க்கட்சிக ளுக்கு பாரபட்சம் காட்டப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இதற்கமைய எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படுவதில்லை என ஐக்கிய தேசியக்க கட்சி ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷவிடம் முறைப்பாடு செய்துள்ளது.

எதிர் வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு மேற்கொள்ளப்படவுள்ள பிரசாரப் பணிகளை உரிய முறையில் மேற்கொள்ள எதிர்க் கட்சிகளுக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழமையான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள அதேவேளை எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அடிப்படை பாதுகாப்பு வசதிகள் கூட ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என கம்பஹா மாவட்ட ஐ.தே.க.வின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளதுடன், கடந்த காலங்களில் ஆட்சி செய்த எந்த வொரு அரசாங்கமும் பாராளுமன்றம் கலைத் ததன் பின்னர் உடனடியாக பாராளு மன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை களையவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தேர்தல்களை நியாயமான முறையில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர் தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மற்றும் தமிழீழ விடுதலைப்புலி அச்சுறுத்தல் முழுமையாக இல்லை என்றால் அனைவருக்கும் ஒரே மாதிரியான பாதுகாப்பு ஏற்பாடுகளே மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் ஜனாதிபதியும் பிரதமரும் சமநிலை பக்கச் சார்பற்ற தன்மை குறித்து வலியுறுத்தும் அதேவேளை எதிர்க்கட்சிகளுக்கு ஒரு விதமாகவும் ஆளும் கட்சியினருக்கு ஒருவிதமாகவும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை ஆளும் கட்சிக்கு தாவினால் பாதுகாப்பு வழங்கப்படுவதாகவும் எதிர்க் கட்சியில் அங்கம் வகித்தால் பாதுகாப்பு அகற்றப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அமைச்சர்கள் பிரதி அமைச்சர்களுக்கு மட்டுமே பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக ஊடக அமைச்சர்கள் தெரிவித்துள்ள போதிலும் சாதாரண ஆளும் கட்சி அமைப்பாளர்களுக்குக் கூட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளார். (2-6)


யா/புங்குடுதீவு
ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம்
நூற்றாண்டு விழா அழைப்பிதழ்

இடம்:- புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம்
காலம்:- 01.03.2010 முதல் 03.03.2010 வரை

நூற்றாண்டு விழா நிகழ்ச்சி நிரல்

01.03.2010 திங்கட்கிழமை

காலை 10.00 மணி : வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி
தலைவர் : திரு.எஸ்.கே.சண்முகலிங்கம் J.P (வித்தியாலய அதிபர்)
பிரதம விருந்தினர் :அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள்
(பொருளாளர்-நூற்றாண்டு விழாக்குழு)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இ

-நூற்றாண்டு விழாக்குழுவினர்.

# ஆங்சான்சூகி விடுதலை மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது

(யாங்கூன்)

மியன்மார் நாட்டில் இராணுவ அரசாங்கத்தை எதிர்த்து போராடி வரும் எதிர்க்கட்சித் தலைவி ஆங்சான் சூகி (வயது 64) கடந்த 14 ஆண்டு காலமாக வீட்டுக்குக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு அவரது வீட்டுக்கு ஒரு அமெரிக்கர் ஏரியை நீந்தி கடந்து வந்து சந்தித்ததாக கூறப்பட்டது. இது தொடர்பான வழக்கில் சூகியை 18 மாதம் வீட்டுக்காவலில் வைக்க கீழ் நீதி மன்று உத்தரவிட்டது.

இதை எதிர்த்தும் தன்னை விடுவிக்கக் கோரியும் அந்த நாட்டின் உயர் நீதிமன்றில் கடந்த நவம்பர் மாதம் சூகி மனுதாக்கல் செய்தார்.

இந்த மனுவில் மீது விசாரணை நடத்திய மியன்மார் உயர் நீதிமன்று அதை தள்ளு படி செய்தது. ஏன்? விடுவிக்கவில்லை என்ற காரணத்தை தெரிவிக்கவில்லை. (2-6)



ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள அமெரிக்கப் படைகளுக்கு பெற்றோல் கொண்டு சென்ற லொறி பாகிஸ்தானில் பெஷாவர் நகரில் தீவிரவாதிகளின் தாக்குதலால் தீப்பற்றி எரிந்தது.பாக். தீ அணைப்பு வீரர்கள் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

# நெப்போலியன் படுக்கையை வாங்கிய இத்தாலிய பிரதமர்

(லண்டன்)

நெப்போலியன் பயன்படுத்திய விலைமதிப்பற்ற படுக்கையை இத்தாலி பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி வாங்கி உள்ளார்.



மாவீரன் என்று அழைக்கப்பட்ட நெப்போலியன் 19ஆம் நூற்றாண்டில் பிரான்ஸ் அரசியலில் கொடிகட்டி பறந்தார். ஐரோப்பிய நாடுகளின் அரசியலிலும் முக்கிய பங்கு வகித்துள்ளார். அவர் காலத்தில் பயன்படுத்திய படுக்கையை 73 வயதான இத்தாலி பிரதமர் பெர்லுஸ்கோனி வாங்கி மிலன் நகரில் உள்ள தனது புதிய வீட்டில் பொருத்தியுள்ளார். விலை உயர்ந்த மரத்தால் ஆன இதன் நான்கு புறங்களிலும் கழுகு உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

பெர்லுஸ்கோனி எனது நெருங்கிய நண்பர் . அவரை எனக்கு கடந்த 25 ஆண்டு களாக தெரியும். அவரது புதிய வீட்டுக்கான மேசை வாங்குவதற்காக எனது நிறுவனத்துக்கு வந்திருந்தார். அப்போது நெப்போலியன் பயன்படுத்திய பழங்கால படுக்கை இருப்பதைப் பார்த்து வியந்தார். அது வேண்டும் என்று கேட்டுக்கொண்டதை அடுத்து அவருக்கு விற்றுவிட்டேன். அரசர் காலத்தில் தயாரிக்கப்பட்ட அது பழங்கால பாரம்பரியத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. அந்த அழகான படுக்கையில் அவர் இனிய கனவு காண்பார் என்று நம்புகின்றேன் என பழங் கால பொருட்கள் விற்பனையாளரான அன்ன மரியா குவாட்ரினி தெரிவித்துள்ளார். (6-2)

## ஆப்கானிஸ்தானில் குண்டு வெடிப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் வெளிநாட்டவர் தங்கியிருக்கும் நட்சத்திர ஹோட்டல் உள்ள பகுதியில் தலிபான்கள் குண்டுத்தாக்குதல் நடத்தியதில் நான்கு இந்தியர்கள் உட்பட 17 பேர் பலியாகினர்.

தலைநகர் காபூலில் வெளிநாட்டவர் தங்கியுள்ள ஹோட்டல்கள் நிறைந்த பகுதியில் 2 கட்டடங்களில் தலிபான் தற்கொலைப் படையினர் குண்டுகளை வெடிக்கச் செய்தனர். இதைத் தொடர்ந்து பாதுகாப்புப்படையினருக்கும் 5 தலிபான் படையினருக்கும் இடையே சண்டை நடந்தது. குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஹோட்டல்கள் சேதமடைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (2-6)

# மனைவி, குழந்தையை கொன்ற பீகார் எம்.எல்.ஏ.தற்கொலை

பீகாரில் ஆளும் கட்சி எம்.எல். ஏ.ஒருவர் தனது மனைவி மற்றும் ஆறு மாத குழந்தையை துப்பாக்கியால் சுட்டு கொலை செய்து விட்டு தானும் தற்கொலை செய்து கொண்டுள்ளார். பீகாரில் ஆளும் ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் எம்.எல்.ஏ.வாக இருந்தவர் அபய் சிங். இவரது தந்தை நரேந்திரா சிங் பீகார் அமைச்சராக உள்ளார். பாட்னாவில் உள்ள அமைச்சர் நரேந்திரா சிங்கின் வீட்டில் தான் அபய் சிங்கும் அவரது மனைவியும் பெண் குழந்தையும் வசித்து வந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை தனது கைத் துப்பாக்கியால் மனைவி மற்றும் குழந்தையை சுட்டுக்கொலை செய்தார் அபய்சிங். பின்னர் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இந்த சம்பவம் குறித்து தகவலறிந்த அமைச்சர் நரேந்திரா சிங் மயக்கமடைந்தார். உடனடியாக அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பீகார் முதல்வர் நிதிஷ்குமார், எதிர்க்கட்சித் தலைவர் ரப்ரி தேவி ஆகியோர் அமைச்சரின் வீட்டுக்கு நேரில் சென்று குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கு ஆறுதல் கூறினார்.

பீகார் டி.ஜி.பி. ஆனந்த் சங்கர் கூறுகையில் , சம்பவத்தின் பின்னணி குறித்த விவரங்கள் தெரியவில்லை. தீவிர விசாரணை நடத்தி வருகிறோம். சம்பவம் நடந்த இடத்தில் இருந்து மாதிரிகள் சேகரிக்கப்பட்டுள்ளன என்றார். (2-6)

# மர்ம மனிதனின் திடீர் தாக்குதல் மெக்சிக்கோவில் 13 பேர் சுட்டுக்கொலை

மெக்சிக்கோ நாட்டில் மர்ம மனிதன் 13 பேரை சுட்டுக்கொன்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெக்சிக்கோவில் உள்ள ஏசாகா என்ற இடத்தில் ஒரு வீட்டுக்குள் புகுந்துள்ள நபர் அங்கிருந்த ஆண் மற்றும் அவருடைய 3 குழந்தைகளை சுட்டுக்கொன்றுள்ளார். அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் ஓடி வந்தனர். அவர்களையும் நோக்கி அவன் சரமாரியாக சுட்டத்தில் அவர்களில் 4 பேர் பலினார்கள்.

இந்த சம்பவம் பற்றி அறிந்ததும் பொலிஸார் விரைந்து வந்தனர். அவர்களை கண்டதும் காரில் ஏறி தப்பி ஓடினார். குறித்த நபர் பொலிஸாரும் காரில் விரட்டி சென்றனர்.

அப்போது பொலிஸாரை நோக்கியும் சரமாரியாக சுட்டத்தில் இதில் 5 பொலிஸார் உயிர் இழந்தனர்.

இவ்வாறு 13 பேரையும் கொன்று விட்டு மர்ம மனிதன் அங்கிருந்து தப்பி ஓடி விட்டார். யார் என்ற விவரம் தெரியவில்லை.

மெக்சிக்கோ நாட்டில் இது போன்ற துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் அடிக்கடி நடக்கின்றன. .5 நாட்களுக்கு முன்பு அங்குள்ள தமுழி பாஸ் என்ற இடத்தில் பொலிஸார். போதை மருந்து கும்பல் இடையே நடந்த சண்டையில் 19 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-6)

## உடற்பருமன் காரணமாக

# அமெரிக்க விமானத்தில் பயணிக்க நடிகருக்கு அனுமதி மறுப்பு

(லொஸ் ஏஞ்சல்ஸ்)

அமெரிக்கா நடிகரும் இயக்குனருமான கெவின் ஸ்மித்தின் உடல் பருமனை காரணம் காட்டி விமானத்தில் பயணிக்க அனுமதி மறுக்கப்பட்டது.

அமெரிக்க நடிகரும் இயக்குனருமான கெவின் ஸ்மித் கடந்த வாரம் ஆக்லாந்திலிருந்து கலிபோர்னியாவில் உள்ள பர்பேங்க் பகுதிக்கு செல்லும் விமானத்தில் பயணிக்க டிக்கெட் வாங்கியிருந்தார்.

ஆனால் இவ் விமானத்தில் ஏற முயன்ற போது அவ் விமானத்தின் விமானி இவரது பருத்த உடம்பை காரணம் காட்டி பயணிக்க அனுமதி மறுத்து விட்டார். இது குறித்து தனது இணையத்தளத்தில் கெவின் ஸ்மித் கவலை தெரிவித்திருந்தார். இதை படித்த இவரது ரசிகர்கள் கொதிப்படைந்து சவுத் வெஸ்ட் ஏர் லைன்ஸ் நிறுவனத்தை மன்னிப்பு கேட்க கோரினர்.

இதற்கு விளக்கமளித்துள்ள சவுத்வெஸ்ட் ஏர்லைன்ஸ் நிறுவனம் கெவின் ஸ்மித் தான் பயணிக்க இருந்த விமானத்தை விட்டு விட்டு அதற்கு முன் புறப்பட்ட விமானத்தில் பயணிக்க விரும்பினார். அந்த விமானத்தில் ஒரே ஒரு இருக்கை.மட்டுமே காலியாக இருந்தது. இவரது பருத்த உடம்புக்கு ஒரு இருக்கை போதாது என்பதால் அந்த விமானத்தில் அனுமதி மறுக்கப்பட்டது.


ஆனால் அடுத்த விமானத்தில் அவர் பயணிக்கும் விதத்தில் இரட்டை இருக்கை ஒதுக்கப்பட்டது. முதல் விமானத்தில் பயணிக்க அனுமதி மறுத்ததற்காக அவரிடம் நாங்கள் மன்னிப்பு கேட்டு விட்டோம் என தெரிவித்துள்ளது. (2-6)

# விமானம் வீழ்ந்து நொறுங்கியதில் 7பேர் பலி- பெருநாட்டில் சம்பவம்

(லிமா)

பெருநாட்டின் புகழ்பெற்ற நாஸ்கா சுற்றுலாத் தலத்தை ஆகாயத்தில் இருந்து பார்ப்பதற்காக வெள்ளிக்கிழமை 7 சுற்றுலா பயணிகள் ஒரு சிறிய விமானத்தில் சென்றனர்.

அந்த விமானம் நாஸ்கா பகுதியில் உள்ள பாலைவனத்தின் மேலாக பறந்து சென்றபோது திடீரென்று கீழே விழுந்து நொறுங்கியது. இதில் விமானத்தில் இருந்த 7 பேரும் கொல்லப்பட்டனர். இதில் ஒரு கைக் குழந்தையும் அடங்கும். பலியான சுற்றுலா பயணிகளில் 4 பேர் சிலி நாட்டைச் சேர்ந்தவர்கள். மற்ற மூவரும் பெரு நாட்டினர் ஆவர்.



கடந்த ஜனவரி மாதம் இப்பகுதியில் ஏற்பட்ட கடும் வெள்ளப்பெருக்கு காரணமாக நாஸ்காவுக்கு செல்லும் சாலைகள் அடியோடு சேதமடைந்து விட்டன. இதனால் இப் பகுதிக்கு கடந்த ஒரு மாதமாக சிறிய விமானத்தில் பயணிகள் சுற்றுலா சென்று பார்வையிடுவது வழக்கமாகவுள்ளது குறிப்பிடத்தக்கது. (6-4)

# வெளிநாட்டு பணியாளர் நியமனம் தொடர்பில் சிங்கப்பூர் அரசாங்கம் புதிய கெடுபிடி


சிங்கப்பூரில் குவியும் வெளிநாட்டு பணியாளர்களை குறைக்கும் விதமாக அவர்களை பணிக்கு நியமிக்கும் கம்பெனிகள் செலுத்த வேண்டிய கட்டணத்தை அதிகரிக்க உள்ளதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

சிங்கப்பூர் பாராளுமன்றத்தில் 2010 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டை தாக்கல் செய்த அந் நாட்டுநிதியமைச்சர் தர்மன் சண்முகரத்தினம் கூறியதாவது,

சிங்கப்பூரில் பணியில் இருப்பவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் வெளிநாட்டவர்கள். எனவே வெளிநாட்டு பணியாளர்களை சார்ந்திருப்பதை குறைக்க உள்ளோம். வெளி நாட்டு பணியாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதற்காக அவர்களுக்கென இட ஒதுக்கீடுமுறையை அமுல்படுத்தாமல் வெளி நாட்டு பணியாளர்களை பணியில் அமர்த்தும் நிறுவனங்கள் ஒவ்வொரு வெளிநாட்டு பணியாளர் சார்பாகவும் அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளது.

இந்த கட்டணம் அடுத்த மூன்றாண்டுகளில் படிப்படியாக அமுல்படுத்தப்படவுள்ளது. உள்ளூர் பணியாளர்களின் திறன் மற்றும் அவர்களின் சம்பளங்களை அதிகரிக்க கம்பெனிகளுக்கு அரசு உதவி செய்யும். சிங்கப்பூரில் அதிகளவு வெளிநாட்டு பணியாளர்கள் குவிவதை தடுக்கவும் வேலைவாய்ப்பு மருத்துவம் வீடு போன்ற வசதிகளுக்காக,தாங்கள் போராடுவதாக உள்ளூர் மக்கள் தெரிவிக்கும் புகார்களை களையவும் இத்தகைய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித் தார்.

சிங்கப்பூரில் பணியாற்றும் வெளிநாட்டு பணியாளர்களால் அந்நாட்டில் சொத்துக்களின் விலையும் உயர்வதாக ஒரு குற்றச் சாட்டு நிலவுகிறது. வெளிநாட்டு பணியாளர்களை குறைப்பது தொடர்பாக அந்நாட்டின் முதல் பிரதமர் லீ கான் இயூ கூறுகையில். வெளிநாட்டு பணியாளர்கள் எண்ணிக்கையை குறைப்பது சரியல்ல. அவர்களின் எண்ணிக்கை குறைந்தால் சொத்து மதிப்பு குறைந்துவிடும் என்றார். (6 4)





கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் கல்லூரி அதிபர் பாடசாலைக் கொடியை ஏற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பொறியியலாளர் ஸ்ரீஸ்கந்தராசா உரையாற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

## ஸ்ரீ கல்கி பகவானின் 61ஆவது ஜென்மதின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீகல்வி பகவானின் 61ஆவது ஜென்மதின நிகழ்வு எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி முதல் சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ஸ்ரீ அம்மா பகவான் பாதபூசை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்விற்கு அனைவரும் வருகை தந்து ஸ்ரீ கல்கி பகவானின் பாததரிசனத்தை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(4-2-6)

## முன்னாள் இராணுவ அதிகாரியிடம் குற்றப்புலனாய்வு பிரிவினர் விசாரணை

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவரும் இராணுவ அதிகாரியுமான மேஜர் ஜெனரல் அசோக் தொரதெனிய குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுடன் இணைந்து செயற்பட்டமை தொடர்பிலேயே அவர் விசாரணை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தொரதெனிய பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

இதேவேளை தொரதெனிய கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது அரசாங்கத்தின் தேர்தல் துஷ்பிரயோகங்களுக்கு இடமளிக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் அரசாங்கத் தரப்பில் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-6)

## நாடளாவிய ரீதியில் புதிதாக 50 நீதிமன்றங்கள் அமைக்கத் திட்டம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் புதிதாக 50 நீதிமன்றங்களை அமைக்கும் திட்டம் ஒன்றை மேற்கொண்டுவருவதாக சட்டம் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இத்திட்டத்துக்கு செலவிட 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி 3 மேல் நீதிமன்றங்கள், 16 மாவட்ட நீதிமன்றங்கள், 19 நீதவான் நீதிமன்றங்கள், 12 சுற்றுலா நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளன.

நீதிமன்றங்களின் அதிகாரப் பிரிவுகளை நிர்ணயிக்கும் குழுவின் சிபார்சுக்கு ஏற்ப இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.

கடந்த நான்கு வருடங்களில் மாகாண மட்டத்தில் 17 மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சு மேலும் தெரிவிக்கின்றது.

(2-6)

## லண்டன் உலகத் தமிழ் மாநாட்டுக்கு அமெரிக்க செனட்டர் செய்தி

(கொழும்பு)

லண்டனில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டின் போது அமெரிக்க செனட்டரும் செனட் வெளியுறவுத் துறை உபகுழுவின் கிழக்கு, மத்திய ஆசிய விவகார தலைவருமான பொப் கெசியினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள செய்தியொன்று வாசிக்கப்பட்டது.

இதில் இலங்கையில் யுத்தத்தின் பின்னர் நாட்டை கட்டியெழுப்பவும் சமூக கட்டமைப்பை மீளக்கட்டியெழுப்பவும் இலங்கைக்கு வெளியில் உள்ள தமிழர்களின் பங்கு முக்கியமானது என அவர் குறிப்பிட்டிருந்தார்.

அமெரிக்கா, இலங்கையின் போருக்குப் பின்னரான இடம்பெயர்ந்தோருக்கான கட்டமைப்புகளுக்கு உதவத் தயாராக உள்ளதாகவும் இலங்கையின் ஜனநாயக முயற்சிகளுக்கு உதவும் உலகத் தமிழ் மாநாட்டுக்கு தாம் நன்றி தெரிவிப்பதாகவும் அவர் அதில் குறிப்பிட்டிருந்தார்.

மேலும் தற்போதைய கஷ்டமான காலகட்டத்தில் இலங்கையின் மக்கள் பொதுவான நிலைப்பாடு ஒன்றுக்கு வருவதன் மூலமே நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்றும் பயங்கரவாதமும் வன்முறையும் அரசியல் வெளிப்பாடுகள் எனக் குறிப்பிட்டுள்ளதுடன் இலங்கையின் மனிதாபிமான முன்னெடுப்புக்களுக்குத் தாம் உதவத் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அதேநேரம் லண்டன் தமிழ் மாநாட்டுக்கும் தமது ஒத்துழைப்பு இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (2-6)

## எச்சரிக்கையை மீறிச் சென்ற வாகனத்தின் மீது பொலிசார் துப்பாக்கிச் சூடு

### ஒருவர் பலியானார்

(கொழும்பு)

எச்சரிக்கையை மீறிச் சென்ற வாகனம் ஒன்றின் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

மாத்தளைப் பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் வாகனத்தில் பயணித்த நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் வாகனத்தின் சாரதி காயமடைந்துள்ளார்.

இதேவேளை குறித்த வாகனத்தில் பயணித்தவர்கள் மது போதையில் இருந்ததாக பொலிசார் தெரிவித்துள்ளார்.

## பேராதனையில் ரயிலுடன் மோதுண்ட இளைஞர் பலி

(கொழும்பு)

பேராதனையில் ரயிலுடன் மோதுண்ட இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். குறித்த இளைஞர் கண்டியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலில் மோதுண்டு விபத்துக்குள்ளானதாக பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் கினிகத்தேனயைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் ஒருவரே உயி ரிழந்துள்ளார். இந்த விபத்து தொடர்பாக பேராதனைப் பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை ஹபரணை திருகோணமலை வீதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹபரணை திருகோணமலை வீதியில் 119 மற்றும் 120 ஆவது மைல்கற்களுக்கு இடையில் ஒன்றுக்கொன்று நேர் எதிரே பயணித்த தனியார் பஸ்ஸூம் வானும் மோதி விபத்துக்குள்ளானதாகவும் இவ் விபத் தில் ஹபரணைப்பகுதியைச் சேர்ந்த வானின் சாரதி உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (3)

## தேர்தல் பிரசாரத்திற்கு செலவிடும் பணம் தொடர்பில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படவேண்டும் - கண்காணிப்பாளர்கள்

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக வேட்பாளர்கள் செலவிடும் நிதி தொடர்பில் கட்டுப்பாடுகளை விதிக்கும் வகையிலான பொறிமுறை ஒன்று நாட்டில் உருவாக்கப்பட வேண்டுமென தேர்தல் கண்காணிப்பாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஒவ்வொரு வேட்பாளரும் தேர்தல் பிரசாரத்திற்காக செலவிடக்கூடிய உச்ச வரம்பு தொகையொன்று நிர்ணயிக்கப்பட வேண்டியது அவசியமானதெனத் தெரிவித்துள்ள அவர்கள் பொதுநலவாய ஒன்றியம் மற்றும் ஏனைய சர்வதேச தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களினால் இந்த நடைமுறை பின்பற்றப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை முன்னிட்டு சில வேட்பாளர்கள் ஏற்கனவே மில்லியன் கணக்கான ரூபாய்களை செலவிட ஆரம்பித்துள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

பொருளாதார ரீதியில் வலுவான வேட்பாளர்கள் செயற்கையாக தங்களை மிகைப்படுத்தி வெளிக்காட்டிக் கொள்ளவே பணத்தைப் பயன்படுத்திக் கொள்வதாகவும் நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கமோ அல்லது அவசியமோ குறித்த வேட்பாளர்களுக்கு சில நேரங்களில் இருக்காது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாரியளவிலான கட் அவுட்கள், சுவரொட்டிகள் உள்ளிட்ட பல்வேறு பிரமாண்டமான விளம்பரங்களின் மூலம் பொருளாதார ரீதியில் நலிவடைந்த ஓர் வேட்பாளர் மக்கள் மத்தியில் சென்று தனது பிரசாரத்தை மேற்கொள்ள முடியாத ஓர் சூழ்நிலை உருவாகக் கூடுமெனவும் இவ்வாறாக செல்வந்த வேட்பாளர்கள் பிரமாண்டமான விளம்பரங்களின் ஊடாக மக்களை ஏமாற்றக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய தேர்தல் முறைமையில் மாற்றங்கள் ஏற்படுத்தும் அதேவேளை வேட்பாளர்களின் பிரசாரப் பணிகளுக்காக செலவிடப்படும் நிதி கட்டுப்பாட்டு பொறிமுறை ஒன்றும் அமுல்படுத்தப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளதுடன் சட்ட விரோதமான பிரசாரங்களின் காரணமாக நாட்டின் வரி செலுத்தும் அப்பாவி மக்களின் பணம் விரயமாக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

மேலும் பங்களாதேஷில் தொலைபேசி கட்டணம், மின்சாரக் கட்டணம் மற்றும் வங்கிக் கடனை செலுத்தத் தவறிய மூன்று வேட்பாளர்களுக்கு வேட்பு மனுத் தாக்கல் செய்ய அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் இவ்வாறான நடவடிக்கைகளை முன்னுதாரணமாகக் கொண்டு செயற்பட வேண்டியது அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரசாரப் பணிகளை மேற்கொள்ளும்போது சகல வேட்பாளர்களுக்கும் சமசந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் எனவும் அவ்வாறு இல்லாத பட்சத்தில் அதனை ஜனநாயக தேர்தலாக கருத முடியாது எனவும் பொதுநலவாய நாடுகள் தேர்தல் கண்காணிப்புக் குழுவினை மேற்கோள்காட்டி கபே அறிக்கை வெளியிட்டுள்ளது.

சில வேட்பாளர்கள் தங்களது கறுப்புப் பணத்தை தேர்தல் பிரசாரப் பணிக்காகப் பயன்படுத்திக் கொள்வதாக கபே அமைப்பின் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த தேர்தலின்போது சில வேட்பாளர்கள் மூன்று நிமிட தொலைக்காட்சி விளம்பரங்களுக்காக ஒன்றரை மில்லியன் ரூபா பணத்தைச் செலவிட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2-6)

கூரையேறி கோழி பிடிக்காதவன் வானம் ஏறி வைகுண்டம் காட்டுவானா?

-தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## தயவு செய்து-தவறாமல் இதை வாசியுங்கள்; யோசியுங்கள்

யாழ். மாவட்டத் தேர்தல் களத்தில் குதித்திருக்கும் பெருந்தொகையான வேட்பாளர்களில் பலருக்கு தமிழ் மக்களின் யதார்த்த நிலை தெரியாது.

அந்தக் காலத்தில் பெருவிரல் அடையாளம் வைப்பது போல வேட்புமனுவில் கையெழுத்து வைத்ததைத் தவிர வேறு எதுவும் அவர்களுக்குப் புரியாது.

இந்தப் பரிதாபநிலை தொகுதிவாரியான நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் இல்லாமல் போனதன் விளைவாகும்.

இது பற்றியெல்லாம் குறிப்பிடுவது பிரயோசனமற்ற தென்பதால் அதனை அப்படியே விட்டு விடலாம். இப்போது தமிழ் மக்களின் எதிர்காலம் பற்றி சிந்திப்பதே அவசியமான விடயமாகும்.

தனிநாடு கேட்ட நாம் இப்போது எதைக் கேட்க வேண்டும். எப்படிக் கேட்டவேண்டும் என்பதில் குழம்பிப்போய் உள்ளோம். இதுவே எங்கள் அரசியல் பலவீனத்தின் வெளிப்படு தன்மையாகும்.

இந்தப் பலவீனம் விமர்சிப்பதற்கோ, எவரிலும் குறை காண்பதற்கோ உரியதல்ல.

மாறாக பலவீனம் நீக்கப்படவேண்டும். அதனை நீக்க வல்லவர்கள் யார் என்று பார்ப்பது தமிழ் மக்களின் தார்மீகப் பணியாகும்.

இப்போதெல்லாம் ஒரு கட்சியில் இருந்து அல்லது சில கட்சிகள் இணைந்த அமைப்பில் இருந்து ஒட்டுமொத்தமான நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் அமையவேண்டும் என்ற கொள்கை பொருத்துடையதல்ல என்பது தமிழ்ப் பற்றாளர்களின் கருத்து. அது நியாயமானது போலவும் உள்ளது.

தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் ஒருமித்து இருக்கும் போதுதான் 'பலம்' ஏற்படும் என வாதிடுவோரின் கருத்தையும் நிராகரிக்க முடியாது.

ஆனால் அத்தகையதொரு சந்தர்ப்பம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற அமைப்பின் ஊடாக எமக்கு ஏற்பட்டிருந்த போதும், அதன் முடிவு அந்த அமைப்பு பல துண்டுகளாக உடைந்ததைத் தவிர வேறு எதுவும் இல்லை.

இந்த உண்மை நிராகரிக்கப்படக்கூடியதல்ல. ஏன் உடைந்தது என்ற ஆய்வுகளும் அவசியமற்றவை-ஏனெனில் அது தமிழ் இனத்தின் குருதியில் கலந்த டிஎன்ஏயின் இயல்பு.

ஆக, தமிழ் மக்களுக்காகக் கதைக்கக் கூடியவர்கள்-நேர்மையானவர்கள்-தமிழ் மக்களுக்கு உதவக்கூடியவர்கள்-துணிந்து பேசக் கூடியவர்கள் எந்தக் கட்சியில் அல்லது சுயேட்சைக்குழுவில் இருக்கிறார்களோ அவர்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைப்பதே பொருத்துடையது என்ற முடிபுக்கு வர வேண்டிய தேவை தமிழ் மக்களுக்கு உண்டு.

ஏனெனில் குறித்த கட்சியைத் சேர்ந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் 'திருகுதாளம்' போடுவதை இன்னொரு கட்சியின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரைக் கொண்டே தடுக்க வேண்டியுள்ளது.

எனவே இம்முறை பொதுத் தேர்தலில் எங்களால் அனுப்பப்படும் நாடாளுமன்ற உறுப்பினர் எங்களுக்கு கெடுதி செய்யாமல் இருப்பதற்காக அவரை 'கண்' காணிக்கக்கூடிய இன்னொரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரையும் நாங்களே தெரிவு செய்து அனுப்ப வேண்டியவர்களாக உள்ளோம். இதில் மக்கள் கருத்தும் வரவேற்கப்படுகின்றது.

# புதியதோர் இலங்கையை கட்டியெழுப்ப முஹம்மது நபியின் போதனை கைகொடுக்கும்

## மீலாத்செய்தியில் ஜனாதிபதி


(கொழும்பு)

சகிப்புத்தன்மை, புரிந்துணர்வு, நல்லிணக்கம் என்ப வற்றுடன் கூடிய புதியதோர் இலங்கையைக் கட்டியெழுப்ப முஹம்மது நபி அவர்களால் போதிக்கப்பட்ட சகோதரத்துவம் கைகொடுக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம் .இதன் மூலம் இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கும் உதவ முடியமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள மீலாத் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கை முஸ்லிம்களுக்கு இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

முஹம்மது நபி பிறந்த தினம் முஸ்லிம்கள் அவரின் போதனைகளை நினைவு கூரும் ஒரு தினமாகும். சமாதானம், நல்லிணக்கம் , கருணை, சுயநலமின்மை, தர்மம் என்ற பல உயர் விழுமியங்களை புனித நபி அவர்கள் தனது போதனைகள் மூலம் முன்வைத்தார்.



முஸ்லிம் மக்களின் சமய மற்றும் கலாசாரச் செயற்பாடுக ளுக்கு முக்கியத்துவம் அளித்து இந்தக் கொண்டாட்டங்கள் இடம்பெறுகின்றன.

இலங்கை முழுவதும் ஜனநாயகம் மீள ஸ்தாபிக்கப்பட்டு சமாதானமும் நிலை நிறுத்தப்பட்டுள்ள நிலையில் அமைதியான சூழலில் இம் முறை முஸ்லிம்கள் மீலாத்துடன் நபியைக் கொண்டாடும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அத்தோடு சமாதானம், பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் சகிப்புத் தன்மை என்பவற்றை சகல சமூகங்கள் மத்தியிலும் கட்டியெழுப்பவும் அவற்றை ஸ்திரப்படுத்தவும் தீவிர பங்களிப்பை வழங்குமாறும் கேட்டுக்கொள்கிறேன் என்றார். (2-6)

# கிளி. மாவட்டத்தில் மிதிவெடியகற்றப்பட்ட இடங்கள் மீள்குடியேற்றத்திற்கு விடுவிப்பு

## யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலர்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி ,மாவட்டத்தில் மிதிவெடி இருக்கலாம் என சந்தேகிக்கப்பட்ட அல்லது உறுதிப்படுத்தப்பட்ட பகுதிகள் தவிர ஏனைய இடங்கள் மீள் குடியேற்றத்திற்கு உகந்ததென விடுவிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலர் வரதராஜா முருகதாஸ் தெரிவித்துள்ளார்.

இதில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கரைச்சி பிரதேச செயலக பிரிவில் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12,13, 14, 15, 16, 23, 26,27,28,29,30, 31,32,33, 34,35,36,37 ஆகிய கிராம அலுவலர் பிரிவில் காணப்படும் வன் னேரிக்குளம், ஆனை விழுந்தான்குளம், கண்ணகைபுரம், ஸ்கந்தபுரம், அக்கராயன் குளம், கோணாவில், பொன்னகர், பாரதிபுரம், மலயாளபுரம், விவேகானந்தநகர், கிருஸ்ணபுரம், உதயநகர், தெற்கு, மேற்கு ,அம்பன்குளம்,செல்வநகர், ஆனந்தபுரம், கிளிநொச்சி நகர்,கனகபுரம், திருநகர் கிழக்கு, வடக்கு கணேசபுரம்,ஜெயந்திநகர், பெரியபரந்தன், உருத்திரபுரம் வடக்கு, தெற்கு ,மேற்கு, சிவநகர், ஊட்டுப்புலம், புதுமுறிப்பு ஆகிய இடங்களும் கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் 43,44,45,46,47, 48,49, 50, 51, 52, 53, 54,55, 56, 57, 58 ஆகிய கிராம அலுவலர் பிரிவில் காணப்படும் குமரபுரம், பரந்தன்,உமையாள்புரம் ஆனையிறவு, கட்டுவன் சொட்டி, குரக்கன் காடு, உறியன் முரசுமோட்டை, கண்டாவளை, பெரியகுளம், கல்மடு நகர், தர்மபுரம் மேற்கு, தெற்கு, புளியம் பொக்கனை, புன்னை நீராவி, பிரமந்தனாறு போன்ற இடங்கள் மிதி வெடியகற்றப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எனினும் இந்த பகுதிகளில் சந்தேகத்திற்கிடமான வெடி பொருட்கள் காணப்படுமிடத்து அதை தொடுவதையோ, நகர்த்துவதையோ தவிர்க்குமாறும் உடன் அப் பகுதியிலுள்ள இராணுவத்தினருக்கோ கிராம சேவகருக்கோ பிரதேச செயலருக்கோ அல்லது மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்துக்கோ இது பற்றி தெரிவித்தால் தேவையற்ற அசம்பாவிதங்களை தவிர்த்து கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் கரைச்சி பிரதேசத் செயலகத்திற்குட்பட்ட கண்டி வீதிக்கு கிழக்குப் புறமாக உள்ள மேலும் ஒன்பது கிராம அலுவலர் பிரிவுகள் இராணுவ தலைமையகத்தினால் மீள் குடியேற்றத்திற்காக விடுவிக்கப்படுமெனவும் இப்பகுதிகளில் மிதி வெடி சம்பந்தமான ஆய்வுக்கு உட்படுத்துவதற்கான நடவடிக் கைகளை யாழ். மாவட்ட மிதிவெடிசெயற்பாட்டு அலுவலகம் மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (6-30)

# தேர்தல் சட்டங்களை மீறுகின்ற ஊடகங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்படும் ஊடகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய தேர்தல் செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள 21 அம்ச விதிகளை பின்பற்றத் தவறும் ஊடகங்களுக்கு எதிராக உச்ச நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் தொடர்பிலான விதிமுறைகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளன என்றும் சகல ஊடகங்களும் தேர்தல் செயலகத்தின் உத்தரவுகளை ஏற்றுச் செயற்பட வேண்டும் எனவும் குறிப்பாக அரசாங்க ஊடகங்கள் இந்த விதிகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களை நடாத்த சகல ஊடகங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

செய்தி அறிக்கையிடல், நேர ஒதுக்கம், நிகழ்ச்சிகள் என பல்வேறு விடயங்கள் பற்றி தேர்தல் செயலகம் விதிகளில் சுட்டிக் காட்டியுள்ளது. (2-6)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மக்கள் தொண்டே மகேசன் தொண்டு



வலிமை நிறைந்த ஒரு களஞ்சியமாக உன்னை உருவாக்கிக் கொள். முதலில் உலக மக்களின் துன்பங்களைக் குறித்து நீ வருந்து. வெறுப்பு உணர்ச்சியாலோ ,பொறாமையாலோ உன்னுடைய மனம் அலைக்கழிக்கப்படாமல் இருக்கிறதா என்று உன்னையேநீ கேட்டுக் கொள்.

உலகின் மீது வெறுப்புணர்ச்சி,கோபம் ஆகியவை அடுக்கடுக்காகச் சுமத்தப்பட்டு வருகின்றன. அது காரணமாக நல்ல காரியங்கள் தொடர்ந்து பலகாலமாக நிறைவேற்றப்படாமல் போயிருக்கின்றன. மாறாகத் தீமையே விளைவிக்கப்பட்டிருக்கிறது. நீ தூய்மை உள்ளனவாக இருந்தால், வலிமை உள்ளவனாக இருத்தால் நீ ஒருவனே உலகிலுள்ள அத்தனை பேருக்கும் சமமானவனாவாய்.

## தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தொடர்பில்

# புதிய சட்டமூலம் - பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தொடர்பான புதிய சட்ட மூலமொன்று விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளதாக பிரதமர் ரட்னசிறி விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு வெளிநாட்டு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தொடர்பில் கண்காணிப்பினை மேற்கொள்ளவும் விசாரணைகளை நடத்தவும் இந்தப் புதிய சட்ட மூலம் வழிகோலும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இத்தொண்டு நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு ஏற்கனவே அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளதாகவும் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தேர்தல்களின் பின்னர் குறித்த வரைவுத் திட்ட சட்ட மூலம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் எனவும் பின்னர் அது சட்ட மூலமாக நிறைவேற்றப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் பூரண உரிமையை அரசாங்கத்திற்கு வழங்கும் வகையில் இந்த சட்ட மூலம் உருவாக்கப்பட்டுள்ளதென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்ட மூலம் தொடர்பான பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் சட்டமா அதிபரிடம் குறித்த சட்டமூல வரைவுத் திட்ட பிரதி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் நிதி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் அரசாங்கம் விசாரணை நடத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-4-6)

# இலங்கை-எரித்திரியா இடையில் இராஜதந்திர உறவுகளில் விரிசல்

(கொழும்பு)

இலங்கைக்கும் எரித்திரியாவிற்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளில் விரிசல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்தும் முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டு வந்ததாகவும் சில ஊடகங்களினால் வெளியிடப்பட்ட அறிக்கைகளினால் இந்த முயற்சி தோல்வியடைந்துள்ளதாகவும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக எரித்திரியா இலங்கையுடனான சகல உறவுகளையும் முறித்துக் கொண்டுள்ளதாகவும் அங்கு தூதரகமொன்றை அமைத்து அதன் மூலம் தமிழீழ விடுதலைப்புலி செயற்பாடுகளை கண்காணிப்பதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சி மேற்கொண்டிருந்ததாகவும் எனினும் இந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் சில சொத்துக்கள் எரித்திரியாவில் காணப்படுவதாகவும் ஊடகங்களில் இது குறித்து வெளியானதைத் தொடர்ந்து அந்த நாடு இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவினை மீளவும் ஏற்படுத்தும் முயற்சிகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகளின் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதனிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் எரித்திரியாவுடன் உறவுகளை வலுப்படுத்த முயற்சிக்கப்பட்டதாக தெரிவித்த அவர் சில நாட்டு எல்லைகளுள் தமிழீழ விடுதலைப்புலி செயற்பாடுகள் இடம்பெறுகின்றமையை அந்த நாடுகள் அறிவதில்லை எனவும் புலிகளின் சர்வதேச வலையமைப்பை இல்லாதொழிக்கும் முயற்சிகளுக்கு மேற்குலக நாடுகள் பூரண ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

புலம்பெயர் இலங்கையர்கள் மற்றும் மேற்குலக நாடுகளின் ஒத்துழைப்பு இன்றி புலிகளின் செயற்பாடுகளை முழுமையாகக் கட்டுப்படுத்துவது சிரமமானதென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

## நிலப்பிரச்சினைகள் தொடர்பில்

# இலங்கை அதிகாரிகளுக்கு அமெரிக்கா விளக்கம்

இலங்கை அதிகாரிகளை கிழக்குத் தீமோருக்கு சுற்றுலாவாக அழைத்துச் சென்று நிலப்பிரச்சினை தொடர்பில் அமெரிக்கா விளக்கம் அளித்துள்ளது.

மோதல்களுக்குப் பின்னர் ஏற்படும் காணி உரிமையாளர் பாதுகாப்பு, உரிமையாளர் அல்லாதோரின் குடியிருப்புக்கள் போன்ற விடயங்கள் தொடர்பான தீர்வினைக் கொண்டதாக இந்தச் சுற்றுலா அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொள்ளும் இலங்கை அதிகாரிகள், தீமோர் அரச அதிகாரிகள், அபிவிருத்திப் பணியாளர்கள், சமூகத் தலைவர்கள் ஆகியோரைச் சந்திப்பதுடன் உள்ளூர் பிரதேசங்களுக்கும் சென்று நிலைமைகளை ஆராயவுள்ளனர்.

இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஏற்படும் காணிப் பிரச்சினைகள் தொடர்பான விடயங்களைக் கையாள்வதற்கு இந்த பயிற்சிநெறி இலங்கை அதிகாரிகளுக்கு உதவும் என அமெரிக்காவைச் சேர்ந்த இந்தத் திட்டத்தின் பணிப்பாளர் றெபேக்கா கோன் தெரிவித்துள்ளார்.

மேலும் மோதல்கள் நடைபெற்ற பகுதிகளில் பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது கடினமான விடயம். ஆனால் நாட்டின் உறுதித்தன்மை மற்றும் எதிர்காலம் என்பன அதனை எவ்வாறு நீதியாக அணுக முடியும் என்பதில் தான் தங்கியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (2-6-4)

# பட்டதாரியற்ற 7ஆயிரத்து 800 ஆசிரியர்கள் விசேட பயிற்சி நெறிக்குத் தெரிவு

(கொழும்பு)

கல்வியமைச்சு 7800 பட்டதாரியற்ற ஆசிரியர்களை விசேட பயிற்சி நெறியொன்றுக்காக தெரிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இத்திட்டம் அமுல்படுத்தப்படுவதாகவும் இரண்டரை வருடங்களுக்கு இப்பயிற்சியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்படவுள்ளன எனவும் கல்வி அமைச்சின் கல்விக் கல்லூரிகள் பிரிவுக்குப் பொறுப்பான ஆணையாளர் வை.ஏ.என்.டி. யாப்பா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இப்பயிற்சிகள் 42 பயிற்சி நிலையங்களில் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் இடம்பெறவுள்ளன. இப்பயிற்சி வார இறுதி நாட்களில் இடம்பெறும் எனக் கூறியுள்ளார். (2-6-4)

# கடும் பனி காரணமாக தேயிலை உற்பத்தி வீழ்ச்சி

(கொழும்பு)

மலையகத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் தற்போது காலை மற்றும் மாலை வேளைகளில் கடுமையான பனியுடன் கூடிய குளிர் காலநிலை தொடர்கிறது.

கடந்த சில வாரங்களாக இப்பிரதேசங்களில் மழை பெய்யாத அதேவேளை கடுமையான குளிர் காலநிலையும் பகல் வேளைகளில் அதிகரித்த வெப்பநிலையும் தொடர்ந்து வருவதனால் பிரதேசமெங்கிலும் வரட்சி நிலை ஏற்படத் தொடங்கியுள்ளது.

இதன் காரணமாக பெரும்பாலான பெருந்தோட்ட பிரதேசங்களில் தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைத் தொடங்கியுள்ளது. இவ்வாறான காலநிலை தொடருமானால் எதிர்வரும் நாட்களில் தொழிலாளர்களின் வேலை நாட்களும் பாதிப்படையக்கூடிய நிலை ஏற்படலாம் என்று தோட்ட நிர்வாகங்கள் தெரிவிக்கின்றன. (2-4-6)



நீர்வேலி காமாட்சி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற ஆன்மீக நிகழ்வில் ஆலய பரிபாலன சபைச்செயலாளர் த. பரராசசிங்கம் உரையாற்றுவதையும் அருகில் இந்தியாவிலிருந்து வருகை தந்த ஸ்ரீலஸ்ரீ வேதாந்த ஆனந்தசுவாமி அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# லசந்த படுகொலை வழக்கில் ஏற்பட்டுள்ள புதிய திருப்பம்



(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் அமரர் லசந்த விக்ரமதுங்க படுகொலை வழக்கு விசாரணைகளில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது வெளிநாட்டில் உயர் பதவியொன்றை வகித்து வரும் இராணுவ மேஜர் ஜெனரல் ஒருவரிடம் இது தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய குறித்த மேஜர் ஜெனரல் நாடு திரும்புமாறு புலனாய்வுப் பிரிவினர் உத்தரவிட்டுள்ளனர்.

அத்துடன் விசாரணைகள் முடிவடையும் வரையில் குறித்த மேஜர் ஜெனரலை கொழும்பில் தங்கியிருக்குமாறு புலனாய்வுப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

மேலும் படுகொலை இடம்பெற்ற தினமன்று பயன்படுத்தப்பட்ட ஐந்து தொலைபேசி இலக்கங்களைப் பரீட்சித்ததன் மூலம் புதிய தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. மலையகத் தோட்டப் புறமொன்றைச் சேர்ந்த தமிழர் ஒருவரின் பெயரில் இந்த தொலைபேசிகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (2-4-6)

# போலி கடவுச் சீட்டு இலங்கை அகதி கைது

ஈரோடு மாவட்டம் அந்தியூர் தபால் நிலையத்திற்கு கடந்த ஒரு வாரத்திற்கு முன் கடவுச்சீட்டு ஒன்று பதிவுத் தபாலில் வந்தது. தபாலை எடுத்துக் கொண்டு சம்பந்தப்பட்ட முகவரிக்குச் சென்ற தபால்காரர் அந்த முகவரியில் யாரும் இல்லாதது கண்டு திரும்பியுள்ளார்.

இது போன்று 3 நாட்கள் அந்த முகவரிக்குச் சென்றும் அங்கு யாரும் இல்லாததால் சந்தேகமடைந்த அவர் அந்தியூர் பொலிஸ் நிலையத்தில் புகார் தெரிவித்தார். இந்நிலையில் அது தனக்கு வந்துள்ளதாகக் கூறி நபர் ஒருவர் தபால் நிலையத்தை அணுகவே சந்தேகமடைந்த தபால் நிலைய அதிகாரி இது குறித்து பொலிசுக்கு தகவல் கொடுத்தார்.

அந்த நபரை பொலிசார் விசாரிததில் அவர் இலங்கையைச் சேர்ந்தவர் என்பதும் புதுக்கோட்டை அகதிகள் முகாமில் 4 வருடங்கள் தங்கியிருந்து தற்போது சென்னையில் தங்கியிருப்பதும் தெரியவந்தது. அவர் கொடுத்த தகவலின்படி மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் அந்தியூர் பஸ் நிலையம் அருகே சந்தேகப்படும்படியாக தென்மாவட்டத்தைச் சேர்ந்த இருவர் தங்கியிருப்பது தெரியவந்ததையடுத்து அவர்களிடம் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றதாக செய்திகள் தெரிவித்துள்ளன. (2-4-6)

# தமிழ்க் கூட்டமைப்பின் ஒற்றுமையை அதன் தலைமைகள் சிதைத்துள்ளன!

## தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணி குற்றச்சாட்டு

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தாம் விலகி தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணியை உருவாக்கியமை தொடர்பாக அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கை அப்படியே இங்கு பிரசுரமாகிறது.**

தமிழ் மக்கள் எதிர்கொண்ட பெரும் துயரமும் வலியும் வேதனையும் இன்னமும் ஆறவில்லை. இந்நிலையில் தமிழ் மக்கள், அரசியல் தலைமைகள் ஒற்றுமையாக இருந்து தமக்கு பலம் சேர்க்க வேண்டுமென விரும்புகின்றார்கள். இந்த விருப்பத்திற்கு மாறாக தமிழ் தேசியக் கூட்டமைப்பினுள் நிலவிவந்த ஒற்றுமையை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகளான இரா.சம்பந்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன், மாவை சேனாதிராஜா ஆகியோர் திட்டமிட்டு சிதைத்துள்ளனர்.

மே 2009இல் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பேரழிவுக்குப் பின்னர் மேற்கூறிய மூவரை கொண்ட அணி தமது மறைமுக நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் எதேச்சாதிகாரமாக செயற்படும் போக்கை தீவிரப்படுத்தியது. இதன் உச்சக்கட்டமாக கூட்டமைப்பின் பெரும்பான்மையான உறுப்பினர்களினதும், மக்களினதும், செயற்பாட்டாளர்களினதும் பங்கு பற்றுதல் இல்லாது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அடிப்படைக் கொள்கைகளை கைவிட்டு அவசரத் தீர்வுத் திட்டம் ஒன்றை தயாரித்து முடித்தனர்.

அடிப்படை கொள்கைகளில் இருந்து விலகிச் செல்லும் இவர்களின் செயற்பாடுகளே கூட்டமைப்பின் ஒற்றுமைக் குலைவுக்கு வழிவகுத்தது.

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது ஏன்?

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒன்றுபட்டு வெளிப்படுத்தக்கூடிய ஒரு அரசியல் தலைமை காலத்தின் கட்டாயம் என்ற அடிப்படையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2001ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

✱தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான தேசிய இனம்.

✱இலங்கைத் தீவின் வடக்கு-கிழக்கு பிராந்தியம் தமிழர்களின் தாயகம்.

✱தமிழ்த் தேசத்திற்கு சுயநிர்ணய உரிமை உண்டு.

என்ற கோட்பாடுகள் அங்கீகரிக்கப்படல் வேண்டும். இம்மூன்று அடிப்படைகளும் தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான தேசம் என்பதையும் அதற்குத் தனித்துவமான இறைமை உண்டு என்பதையும் வலியுறுத்துகின்றன. இத்தகைய அங்கீகாரம் தருகின்ற அரசியல் அந்தஸ்தின் நிலைநின்றே தமிழர் தரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட முடியும்.

இலங்கைத் தீவில் இரு தேசங்கள் உள்ளன என்பதை ஏற்றுக் கொள்ளுகின்றபோது தான், இவ்விரு தேசங்களும் இணைந்த ஒரு நாட்டில் நாம் சமாதான சகவாழ்வு வாழமுடியும். இந்த நிலைப்பாட்டின் அடிப்படையி லான அரசியற் பேச்சுவார்த்தை மூலம்தான் தமிழர்களின் அரசியற் பிரச்சினைக்கான தீர்வை நாம் எட்ட முடியும். இந்தப் பாதையிலிருந்து தமிழர்களின் அரசியற் தலைமைகள் ஒருபோதும் விலகிப் பயணிக்க முடியாது. இதனையே தமிழ்மக்கள் மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தி வருகின்றனர். 2001ஆம், 2004ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலிகளில் த.தே.கூவினால் முன்வைக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு மக்களால் வழங்கப்பட்ட ஆணையும் இதுவே.

இந்த நிலைப்பாடு தமிழர்களின் அரசியற் கொள்கைகளிலிருந்து பிரித்துப்பார்க்க முடியாதது, சமரசத்திற்கு அப்பாற்பட்டது.

### தந்தை செல்வா காலத்தில் தோல்வியடைந்த தந்திரோபாயம்

இத்தகைய தீர்மானம் ஒன்றிற்கு தமிழ் அரசியல் தலைமைகள் செல்லுவதற்கு முன்னரான முப்பது ஆண்டுகளில் இலங்கை அரசுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை அங்கீகரிக்கும் வகையில் இலங்கை அரசின் அரசியல் கட்டமைப்புக்களில் திருத்தங்களை கொண்டு வருவதன் மூலம் அதிகாரப்பகிவு என்ற பாதை ஊடாக இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இத்தகைய முயற்சிகளாகவே பண்டா-செல்வா உடன்படிக்கை, டட்லி- செல்வா உடன்படிக்கை போன்ற அரசியல் தீர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதே போன்று 1970ஆம் ஆண்டு தேர்தலில் அமோக வெற்றி பெற்ற தந்தை செல்வா தலைமையிலான இலங்கை தமிழரசுக் கட்சி தேர்லின் பின்னர் இலங்கைக்கான புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையில் அதிகாரப் பகிர்வு ஊடாக இலங்கை அரசை மாற்றி அமைத்து ஓர் சமஷ்டி ஆட்சி முறையை ஏற்படுத்த வேண்டும் என்ற பிரேரணையை முன்வைத்தது. அந்தப் பிரேரணை உடனடியாக நிராகரிக்கப்பட்டது மட்டுமல்லாமல் தமிழர் தரப்பு கோரிக்கைக்கு நேரெதிராக இலங்கை அரசை ஓர் ஒற்றையாட்சி அரசாக உத்தியோகபூர்வமாக அரசியலமைப்பினூடாக நிலைநாட்டப்பட்டது.

அத்துடன் அதுவரை காலமும் தமிழ், முஸ்லிம் மக்களின் பாதுகாப்பிற்காக என சோல்பரி அரசியல் அமைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்த 29ஆம் சரத்து நீக்கப்பட்டது. பௌத்த மதம் அரசியல் யாப்பின் ஊடாக முதன்மையான மதம் என்ற அந்தஸ்து வழங்கப்பட்டு சிங்கள மொழி மட்டுமே ஆட்சி மொழியாக அரசியல் அமைப்பின் மூலம் அமுல்படுத்தப்பட்டது.

தமிழ் தலைமையினால் முன்வைக்கப்பட்ட அதிகாரப்பகிர்வுக்கான தீர்வு யோசனைகள் முழுமையாக நிராகரிக்கப்பட்டது மட்டுமன்றி சிங்கள அரசின் மேற்கூறிய செயற்பாடுகள் அதற்கு நேரெதிரான திசையில் அமைந்தன. இத்தகைய அனுபவங்கள் காரணமாகவே தந்தை செல்வா அவர்கள் ஓர் தீர்க்கமான மாற்று முடிபுக்கு வரவேண்டியிருந்தது. இதே வகையில் இனப்பிரச்சினைக்கு பல்வேறு வழிமுறைகளூடாக தீர்வுகாண முற்பட்ட அனைத்து தமிழ் தலைமைகளும் இலங்கை அரசியலமைப்பின் வரையறைக்கு உட்பட்ட அதிகாரப் பகிர்வு பாதையூடாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது என்ற நிலைப்பாட்டுக்கு வந்தன.

இதன் விளைவாக தமிழ் மக்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை, தனித்துவமான தேசம், இறைமை ஆகியவற்றினடிப்படையில் 1976இல் வட்டுக்கோட்டைத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அதற்கு 1977ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் மக்களாணை வழங்கப்பட்டது.

இந்த அடிப்படையிலேயே கடந்த முப்பது ஆண்டுகள் தமிழ் மக்களது உரிமைகளைப் பெறுவதற்கான பயணம் நடைபெற்றது.

### தோல்வியடைந்த தீர்வுப் பாதைக்கு திரும்ப முயலும் கூட்டமைப்பு

இந்நிலையில் தந்தை செல்வா தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஒரு போதும் உதவாது என்று 35வருடங்களுக்கு முன்னர் கைவிட்ட வழிமுறைகளை மீண்டும் கையாள கூட்டமைப்பின் தலைமை முயல்கின்றது. 2009 மே மாதத்தின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த தலைமைகளினால் இரகசியமான முறையில் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களை ஈடுபடுத்தாமல் தீர்வுத்திட்ட வரைபு ஒன்று தயாரிக்கப்பட்டது.

இவ்வாறு தயாரிக்கப்பட்டுள்ள வரைபில் தமிழ் மக்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படை கோட்பாடுகள் கைவிடப்பட்டுள்ளன. இந்த அடிப்படைப் பிறழ்வு நீண்டகாலமாக உறங்கு நிலையில் இருந்த பொழுதும் வன்னிப் போர் இறுதிக் கட்டத்தை நெருங்கும் பொழுதே வெளிப்படையாக தலைதூக்கியது.

### கொள்கைகளை காப்பதற்காக கூட்டமைப்பினுள் போராட்டம்

தீர்வுத்திட்ட வரைபு தயாரிக்கப்படுவது தொடர்பான தகவல் அறிந்த கூட்டமைப்பு உறுப்பினர்கள் பலர் கூட்டமைப்பின் மூத்த தலைமைகளுடன் தொடர்பு கொண்டு தீர்வுத்திட்ட வரைபானது தமிழ் மக்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை, தனித்துவமான தேசம், தனித்துவமான இறைமை என்ற அடிப்படைகளிலேயே அமைய வேண்டும் என வலியுறுத்தி வந்தனர்.

குறித்த தீர்வுத்திட்ட வரைபு தயாரிக்கப்பட்டு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாசித்துக் காட்டப்பட்டது. அந்த தீர்வுத்

வேண்டும் என வலியுறுத்தி வந்தனர். குறித்த தீர்வுத்திட்ட வரைபு தயாரிக்கப்பட்டு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாசித்துக் காட்டப்பட்டது. அந்த தீர்வுத்திட்ட வரைபானது தமிழ் தேசியத்தின் அடிப்படை கொள்கைகளை கைவிட்டு தயாரிக்கப்பட்டுள்ளது என உறுப்பினர்களில் பெரும்பாலானோர் சுட்டிகாட்டியிருந்தனர். அத்துடன் தாயகம், தேசியம், சுயநிர்ண உரிமை, தனித்துவமான தேசம், அதன் தனித்துவமான இறைமை ஆகியன அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலேயே தீர்வுத்திட்டம் அமைய வேண்டும் என வலியுறுத்தினர்.

### கூட்டமைப்பின் பிடிவாதம்

மேற்படி உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்க முடியாது என கூட்டமைப்பின் மூத்த தலைமைகள் எதேச்சாதிகாரமாக மறுத்தனர். தாயகம் தேசியம், சுயநிர்ணய உரிமை, தனித்துவமான தேசம், இறைமை என்ற அடிப்படைகளில் தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைப்பதனை பிராந்திய சக்திகள் ஒரு போதும் விரும்பாது, ஏற்றுக் கொள்ளாது என்றும் அந்த சக்திகளின் விருப்பப்படியே தாம் செயற்பட வேண்டும் என்றும் தாம் அதனையே கடைப்பிடித்து வருவதாகவும் அடித்துக் கூறிவிட்டனர். அத்துடன் அதிகாரப்பகிர்வு அடிப்படையில் தாம் தயாரித்துள்ள தீர்வுத்திட்டத்தினையே முன்வைப்பது என தாம் தீர்மானித்து விட்டதாகவும் உறுப்பினர்கள் யாருடைய ஆதரவு இல்லாவிட்டாலும் இந்த தீர்வுத்திட்ட வரைபை சமர்ப்பித்தே தீருவோம் என்றும் ஆணித்தரமாக கூறிவிட்டனர்.

நாம் பிராந்திய சக்திகளதோ அல்லது வேறு எந்தவொரு நாட்டினதுமோ நலன்களுக்கு எதிராக செயற்படும் நோக்கம் கொண்டவர்கள் அல்லர். எனினும் பிராந்திய சக்திகளினதும், ஏனைய நாடுகளினதும் விருப்பத்திற் கேற்ற வகையில் எமது மக்களின் அடிப்படை அரசியல் அபிலாசைகளை கைவிட்டு தீர்வுத் திட்டம் ஒன்றினை முன்வைக்க வேண்டும் என்ற கூட்டமைப்பு தலைமைகளின் சரணாகதி அரசியல் நிலைப்பாட்டினையே நாம் நிராகரிக்கின்றோம்.

எமது மக்களின் நியாய மான அரசியல் அபிலாசைகளை வெளிப்படுத்தி அதற்கான அங்கீகாரத்தினை பெறும் வகையில் பிராந்திய வல்லரசுடனும் ஏனைய உலக நாடுகளுடனும் நல்லுறவுகளை வலுப்படுத்த வேண்டும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடாகும். இதற்கான சாத்தியங்கள் நிறையவே உண்டு.

ஏனெனில் இலங்கை அரசின் வெளிவிவகாரக் கொள்கை செயற்பாடுகள் காரணமாக இலங்கை அரசு மீது அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டிய தேவை சர்வதேசத்திற்கு அதிகரித்து வருகின்றது. இந்த அழுத்தங்களை பிரயோகிப்பதற்கு தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கையை சர்வதேசம் தனது கையில் எடுக்கும் சாத்தியப்பாடுகள் நிறையவே உண்டு.

இவ்வாறு உருவாகக் கூடிய சூழலை எமக்கு சாதகமாக பயன்படுத்த வேண்டுமாயின் நாம் எமது கொள்கை நிலைப்பாட்டில் சமரசத்திற்கு அப்பாற்பட்டவர்களாக மிகவும் உறுதியாக நிற்பது அத்தியாவசியம்.

### தமிழர்களது அபிலாசைகளுக்கு இடம் மறுக்கப்பட்டது

யதார்த்தம் இவ்வாறு இருக்க தமிழ் மக்களின் அடிப்படை கொள்கைகளுக்கு முரணாக மூத்த தலைமைகள் தீர்மானங்களை மேற்கொண்டன. அந்த தீர்மானங்களுடனும் செயற்பாடுகளுடனும் இணங்க மறுத்து தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாசைகளை எடுத்து கூறிவந்த கட்சிகளை சாராத கூட்டமைப்பு உறுப்பினர்கள் திட்டமிட்டு அகற்றப்பட்டனர்.

கூட்டமைப்பு தமிழ் மக்களின் அடிப்படை கொள்கைகளில் உறுதியாகவும் பிளவின்றி ஒற்றுமையாகவும் இருக்க வேண்டும் என்று தமிழ் காங்கிரஸ் கட்சி ஆழமாக விரும்பி அதை நிறைவேற்ற சாத்தியமான அனைத்து வழிகளிலும் முயற்சி செய்தது.

இதன் கடைசி கட்டமாக எதிர்வரும் காலங்களில் தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் கோட்பாடுகளை ஏற்கின்ற அனைத்து கட்சிகளினதும் தரப்புக்களினதும் ஏகமனதான ஒப்புதல் பெறப்படும் என்ற எழுத்து மூலமான உத்தரவாதத்தை அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி கோரியது. இவற்றை கூட்டமைப்பின் தலைமை முற்றாக நிராகரித்த வேளையிலேயே அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி கூட்டமைப்பில் இருந்து வெளியேற வேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டது.

எனினும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியானது கொள்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காது கூட்டமைப்பினுள் இருக்குமாறு அதன் மூத்த தலைமைகள் பிடிவாதம் பிடித்தன. ஆனால் கொள்கைகளை நேர்மையாகவும் உறுதியாகவும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கூட்டமைப்பிற்குள் இருந்து வெளியேற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

### கூட்டமைப்பின் ஒற்றுமை நாடகம்

தமது தவறுகளை மூடி மறைப்பதற்காக ஒற்றுமை என்ற உயரிய விழுமியத்தை தமக்கு சாதகமாக பயன்படுத்தும் கூட்டமைப்பின் இந்தப் பிரகிருதிகளின் சுயரூபத்தினை தேர்தலுக்கு முன்னர் தமிழ் மக்களுக்கு தோலுரித்துக் காட்ட வேண்டிய வரலாற்றுக் கடமை எமக்குள்ளது.

இதன் மூலம் தமிழ் மக்கள் தமது தேசிய, அரசியல் அபிலாசைகளுக்காக உண்மையாகவும் உறுதியாகவும் குரல் கொடுக்க கூடியவர்களை தமது பிரதிநிதிகளாக தெரிவு செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதும் எமது முக்கிய பொறுப்பென நாம் உணர்கின்றோம்.

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உதயம்

இந்த நோக்கில் தமிழ் மக்களின் தாயகம், தேசியம், சுயநிர்ண உரிமை, தனித்துவமான தேசம், இறைமை ஆகிய அடிப்படை கொள்கைகளில் உறுதிப்பாட்டுடன் கூட்டமைப்பின் உள்ளிருந்தும் வெளியிருந்தும் செயற்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொது அமைப்புகளை சார்ந்த பிரதிநிதிகளும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியும் ஒன்றிணைந்து தமிழ் தேசத்திற்கான மக்கள் முன்னணி என்ற புதிய அமைப்பை உருவாக்கியுள்ளோம்.

கூட்டமைப்பின் ஒற்றுமையை குலைப்பது எமது நோக்கமல்ல. தமிழ் மக்களின் வாக்குப் பலத்தை சிதறடிப்பதும் எமது நோக்கம் அல்ல. அதுபோல தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை குறைப்பதும் எமது நோக்கம் அல்ல.

ஆனாலும் கூட்டமைப்பை தவறான வழிக்கு இட்டுச் செல்லும் இந்த தலைமைகள் அகற்றப்படல் வேண்டும். இந்த தலைமைகள் யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய தேர்தல் மாவட்டங்களில் போட்டியிடுகின்றனர்.

இந்த தவறான தலைமைகள் அகற்றப்பட வேண்டுமென்றால் திருகோணமலை யாழ்ப்பாணம் ஆகிய தேர்தல் மாவட்டங்களில் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுகின்ற தமிழ் தேசிய கூட்டமைப்பு தோற்கடிக்கப்படல் வேண்டும்.

### மீண்டும் ஒற்றுமை

இதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தூய்மை செய்யப்பட்டு அது ஆரம்பிக்கப்பட்ட உண்மையான அர்த்தத்தில் மீண்டு வருவதற்கு வாய்ப்பு உண்டு. அத்தகைய சூழ்நிலையில் அடிப்படை அரசியல் கொள்கைகளில் உறுதியாகவுள்ள அனைத்துதரப்புகளுடனும் ஒன்றிணைந்து செயலாற்ற தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி தயாராக உள்ளது.

தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் தாயகத்திலுள்ள தமிழ் மக்களுடனும், புலம்பெயர் தமிழ் மக்களுடனும் இணைந்து சர்வதேச சமூகத்துடன் செயலாற்றி தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை, தனித்துவமான தேசம், இறைமை ஆகிய கொள்கைகளுக்கான அங்கீகாரத்தை பெற்று அதனடிப்படையில் கௌரவமான பாதுகாப்பான அரசியல் தீர்வு அடைவதற்காக அர்ப்பணிப்புடனும், நேர்மையுடனும் உழைக்கும் என சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணி உறுதியளிக்கின்றது.

பொதுத் தேர்தல்-2010

நடுநிலையோடு செயற்படும் வலம்புரி நாளிதழ் அனைத்துக் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களினதும் கருத்துக்களை பொதுமக்களுக்கு வழங்க இப்பகுதியில் சந்தர்ப்பம் அளிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். (ஆ-ர்)

# பொதுத் தேர்தலின் பின்...

பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றாலும், தோல்வி கண்டாலும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே பிரதமராக தெரிவு செய்யப்படுவார். இதன் அடிப்படையிலேயே அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றதாக கூறப்படுகிறது.

சரத் பொன்சேகா சுதந்திரமாக செயற்படும் பட்சத்தில் ரணில் விக்கிரமசிங்கவின்; எதிர்க்கட்சிகளின் பிரதான தலைவர் என்ற அந்தஸ்துக்கு பங்கம் ஏற்படும் வகையில் அமையும்.

சரத் பொன்சேகா குறுங்காலத்தில் பெற்ற பிரசித்தத்தின் அடிப்படையில் எதிர்க்கட்சிகளின் பல உறுப்பினர்கள் அவருக்கு ஆதரவாக செயற்பட முன்வந்துள்ளமையே இதற்கு காரணம் எனவும் கூறப்படுகிறது.

எனினும் சரத் பொன்சேகாவை தமது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள அண்மைக் காலமாக ரணில் விக்கிரமசிங்க முயற்சி மேற்கொண்டமையும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயம்.

எனவே சரத் பொன்சேகாவை விடுவிப்பது தொடர்பிலோ, அல்லது தடுத்து வைக்கும் அடிப்படையிலோ ரணில் விக்கிரமசிங்க அதீத அக்கறை காட்டிக்கொள்வதில்லை. இந்தநிலையில் அண்மையில் ஜனாதிபதியுடன் மேற்கொள்ளப்பட்ட சந்திப்பின்போது சரத் பொன்சேகா விடுவிக்கப்படுவதற்கு ஜனாதிபதியால் தேசிய அரசாங்கம் நிபந்தனையாக முன்வைக்கப்பட்டதாக தகவல்கள் கசிந்துள்ளன. இதற்கு ரணில் விக்கிரமசிங்க ஒப்புதல் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகின் றது.

எனினும் சரத் பொன்சேகாவை விடுவிக்கும் வகையில் ரணில் விக்கிரமசிங்க செயற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் ரணில் விக்கிரமசிங்கவை பொதுத்தேர்தலை நடத்தாது பிரதமராக நியமிப்பது தொடர்பில் ஜனாதிபதி தீர்மானித்திருந்ததாகவும் எனினும் பொதுத் தேர்தலை நடத்தியதன் பின்னர் இதனை மேற்கொள்ளுமாறு ரணில் விக்கிரம சிங்க கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாகவே நாடாளுமன்றத்தின் இறுதிக்கூட்டம் நடத்தப்பட்டதன் பின்னரும் அது கலைக்கப்படாமல் பிறிதொரு நாளில் கலைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தின் முழுமையான நோக்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்று புதிய அரசியல் யாப்பினை உருவாக்குவதாகவே காணப்படுகிறது. எதிர்கால வரலாற்றின் எந்த இடத்திலும் தமது பெயர் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அடிப்படையிலேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த யாப்பு சீர்திருத்தத்தையும் மேற்கொள்கிறார்.

இதன் அடிப்படையிலேயே அவரது உருவம் பொறிக்கப்பட்ட ஆயிரம் ரூபாய் நாணயத்தாளும் வெளியிடப்பட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

அத்துடன் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அம்பாந்தோட்டை துறைமுகம் உள்ளிட்ட பல திட்டங்களுக்கு மகிந்த ராஜபக்ஷவின் பெயரைச் சூட்டும் முயற்சியும் காணப்படுகிறது. இந்த நிலையில் நிலையான ஆட்சிக்காகவும் தமது நோக்கமான யாப்பு சீர்திருத்தத்திற்காகவும் மகிந்த ராஜபக்ஷ இந்த தேசிய அரசாங்கக்கோரிக்கையை முன்வைத்துள்ளார். இதற்கிடையில் தேசிய அரசாங்கத்தை முழுமையாக நம்பிக்கை இல்லாத ரணில் விக்கிரமசிங்க தேர்தலின் பின்னர் ஒருவேளை ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெறுமாக இருந்தால் தேசிய அரசாங்கத்தை நிராகரிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் அடிப்படையிலேயே அவர் பொதுத் தேர்தலுக்கு முன்னுரிமை வழங்கியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

# ஜனநாயகத்தை நோக்காக...

அவர் அந்த மாநாட்டுக்கு சமுகம் அளித்தாக தெரிவித்துள்ளார். பிரித்தானிய தமிழ் சமூகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உலக தமிழர் மாநாட்டில் பிரித்தானிய அரசாங்கத்தின் உயர் மட்டங்கள் கலந்து கொண்டமைக்கு இலங்கை மீண்டும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

பிரித்தானியாவின் ஆசிய விவகாரங்களுக்கு பொறுப்பான பிரதிப்பணிப்பாளர் அன் றூவ் பற்றிக்கை ஐக்கிய ராச்சியத்திற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் நிஹால் ஜயசிங்க சந்தித்துள்ளார்.

இதன் போது உலகத் தமிழர் மாநாட்டில் பிரித்தானிய வெளியுறவுச் செயலாளர் டேவிட் மிலிபாண்ட் கலந்து கொண்டிருந்தார். இது தொடர்பில் இலங்கை அரசாங்கம் கண்டனம் தெரிவித்திருந்தது.

இதற்கிடையில் இந்த சந்திப்பின் போது இலங்கையுடன் நெருங்கிய உறவை பேணுகின்ற ஐக்கிய ராச்சியத்தின் இந்த செயற்பாடு அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாக உயர்ஸ்தானிகர் நிஹால் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் நடைபெற்ற இம் மாநாட்டை அவர் புறக்கணித்திருக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# தமிழக-யாழ்.மீனவர்களுக்...

இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என நாம் கருதினோம். ஆனால் அதனை மேற்கொள்ள முடியவில்லை என யாழ்ப்பாண மாவட்ட மீனவர் சங்கத் தலைவர் எஸ்.தவரட்ணம் தெரிவித்துள்ளார்.

எனினும் தமிழக மீனவர் சங்கத்தலைவர் அருளானந்தத்துடன் நாம் தொடர்ந்து தொடர்புகளை பேணி வருகிறோம். எனவே நாம் விரைவில் சந்திப்புக்களை மேற்கொள்வோம்.

அருளானந்தம் சந்திப்பை மேற்கொள்ள ஆவலாக இருந்தார். ஆனால் இந்திய அரசு அதற்கான அனுமதிகளை வழங்கவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இருந்த போதும் கச்சதீவில் நடைபெறும் விழாவில் கலந்து கொள்வதற்கு யாழ்ப்பாணத்திலிருந்து 40 படகுகளில் ஆயிரம் மீனவர்களும், தமிழகத்திலிருந்து 200 படகுகளில் 5 ஆயிரம் மீனவர்களும் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-5,9)

# பிரதான அதிகாரியாக இருக்...

களை பொன்சேகா கொண்டிருந்ததாக லக்ஸ்மன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் ஒருவரிடம் பொன்சேகா, சி.டி.எம்.ஏ. தொலைபேசி ஒன்றை அனுப்பி வைத்து தம்மிடம் உரையாடுமாறு கோரியதாகவும் அந்த தொலைபேசி உரையாடலின் போது அரசியல் விவகாரங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன் பின்னர் சில எதிர்க்கட்சி அரசியல் வாதிகளுடன் பொன்சேகா பேச்சுவார்த்தை நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை தொலைபேசி ஊடாக சரத் பொன்சேகா தம்மிடம் பேச்சு வார்த்தை நடத்தியதாக முன்னாள் அமைச்சர் ஜோன்சன் பெர்ணான்டோவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு எதிரான சாட்சியங்களை திரட்டும் பணி பூர்த்தியாகியுள்ளதாகவும் விரைவில் அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)


## வந்துவிட்டது வெற்றித்தேர்வு

கடந்த ஆண்டுகளில் சாதனை படைத்துவரும்
உதவிக்கல்விப்பணிப்பாளர் கணேசலிங்கம்.
சாதனை ஆசிரியர் தவயோகராசா.
விரிவுரையாளர் சரா.புவனேஸ்வரன்.
ஆகியோரின் உருவாக்கத்தில்..

2010-தரம்:5 வெற்றித்தேர்வு 1,2,3
அனைத்து புத்தகசாலைகளிலும் தொடராக பெறுங்கள்
2010-தரம்:4 வெற்றித்தேர்வு ஓரிரு நாட்களில்
தொடர்புகளுக்கு:0212229016/ 0775388471


# இந்தோனேசிய மெரேக் துறைமுகத்தில் இலங்கை அகதிகளின் நிலை பரிதாபம்

(கொழும்பு)

இந்தோனேசியாவில் மெரேக்துறை முகத்தில் தரித்துள்ள படகில் தங்கியுள்ள 250 இலங்கை அகதிகளும், அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். எனினும் அந்த படகில் உள்ள அகதிகளின் நிலைமை நாளுக்கு நாள் மிகவும் மோசமடைந்துசெல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் கடந்த வாரம் அவுஸ்திரேலியாவின் ஆட்கடத்தல் விவகாரங்கள் தொடர்பிலான சிறப்பு தூதுவர் பீற்றர் வூல்கோட் இந்தோனேசியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

எனினும், படகில் உள்ள இலங்கை தமிழர்களின் பாதுகாப்பு மற்றும் அரசியல் அந்தஸ்து வழங்கல் தொடர்பில் எவ்விதமான உறுதிப்படுத்தலையும் அவர் வழங்கவில்லை. எனினும் சர்வசாதாரணமாக அவர்களை படகுகளில் இருந்து இறங்குமாறு மாத்திரம் கூறி சென்றதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்கிடையில் அவர் அவுஸ்திரேலிய இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றின் போது, இந்த விவகாரத்தை இந்தோனேசியாவே பார்த்துக் கொள்ள வேண்டும் என கூறியிருந்தார். எனினும் இந்தோனேசிய அரசாங்கம் அவர்களுக்கான அகதி அந்தஸ்து வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் பேரவைக்கு சிபார்சு செய்யாத நிலை காணப்படுகிறது.

அத்துடன் அவர்களை நாடு கடத்த அல்லது நிரந்தரமாக அகதிகள் முகாம்களில் தடுத்து வைக்கும் எண்ணத்தை அது கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையில் இந்த விவகாரம் குறித்து, அவுஸ்திரேலிய பிரதமர் கெவின் ரூட்டின் நிலையும் படகில் உள்ள இலங்கை அகதிகளுக்கு பாதகமானதாகவே காணப்படுகிறது. (ச-5)

# தமிழ்த் தேசியத்தினை வலி...

கட்சியின் யாழ். அலுவலகத்தில் நடத்தியது.

இவ்வூடகவியலாளர் மாநாட்டில் முன்னணியின் உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தனர். தமிழ்த் தேசியம், தாயகம், சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் எமது அமைப்புகளில் அங்கம் வகிப்போரும் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து தமிழ்த் தேசியத்திற்கான முன்னணியை உருவாக்கியுள்ளோம். இம் முன்னணி கடந்த 1977 ஆம் ஆண்டு தமிழ்த் தலைவர்களால் முன்வைக்கப்பட்ட வட்டுக் கோட்டை தீர்மானத்தை முன்வைத்து தேர்தலில் போட்டியிடுகின்றது.

சமஷ்டி முறையிலான அரசியல் அதிகாரப் பரவலாக்கல் தீர்வு தோல்வியடைந்ததைத் தொடர்ந்தே தந்தை செல்வா தலைமையிலான தமிழ் பிரதிநிதிகளால் வட்டுக்கோட்டை தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமையவே நாம் தமிழ்தேசியம், தாயகம் சுயநிர்ணயத்தை வலியுறுத்துகிறோம். எனினும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, தந்தை செல்வா தோல்வியடைந்தது என கைவிட்ட அரசியல் பரவலாக்கல் என்ற தீர்வையே இப் போது பேசுகிறது.

ஆனால் நாம் இந்தியாவோ அல்லது வேறு நாடோ தனது நலனுக்காக எங்கள்மீது திணிக்கும் தீர்வையேற்க முன்வர மாட்டோம். அத்துடன் புலத்தில் உள்ள உறவுகளுடனும் புலம் பெயர்ந்த எமது உறவுகளுடனும் இணைந்தே பணியாற்றுவோம். இதில் எவ்வித சந்தேகங்களும் மக்களுக்கு ஏற்படக்கூடாது என்றனர். (ச-5)

# ஏழாவது...

மாவட்டங்களிலும் போட்டியிடுகின்றனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடும் இரண்டு ஊடகவியலாளர்களில் ஒருவரான முன்னாள் ரூபவாஹினித் தலைவரான கருபரணவிதான இரத்தினபுரி மாவட்டத்திலும் ஐ.ரி.என் தொலைக்காட்சியின் பதில் பணிப்பாளரான சுதர்மன் ரதலியகொட கொழும்பு மாவட்டத்திலும் போட்டியிடுகின்றனர். (ச)

# ஐ.தே.கவின்...

பெரேரா தலைமையில் நடை பெற்ற இக்கூட்டத்தில் கலந்து கொண்ட மேர்வின் சில்வா உரையாற்றுகையில்,

எதிர் வரும் பொதுத் தேர்தலில் பிரச்சினை இல்லாமல் செயற்படுவதோடு இனிவரும் காலப்பகுதிகளில் சிறப்பான அரசியல் ஒன்றை ஏற்படுத்த வேண்டும். இதேவேளை அன்னத்தின் செயற்பாட்டாளர்கள் களனிக்கு வரக்கூடாது என தெரிவித்தார். (ச-5)

# பொதுத் தேர்...

சிக்கல்கள் இல்லை எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். இந்துப்பத்திரி கைக்கு வழங்கிய செவ்வியில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# வேட்பாளர்களுக்...

பெற்றுக்கொண்டதன் பின்னர் நடத்தப்படும் அரசியல் பிரசாரக் கூட்டங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படும் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரசந்த ஜெகக்கொடி தெரிவித்துள்ளார்.

கூட்டங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டியது பொலிஸாரின் கடமை எனவும் தொடர்ச்சியாக பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# அப்பாத்துரை விநாயகமூர்த்தி...

பூர்வமாக வெளியேறியது.

எனினும் எமது கட்சியின் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தாம் தொடர்ந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் நீடிப்பதாகவும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவியை இராஜினாமா செய்வதாகவும் எழுத்து மூலம் அறிவித்தார்.

இந்நிலையில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் செயற்குழு நேற்றுக் கூடி அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் இராஜினாமா கடிதத்தை ஏற்றுக்கொண்டதுடன் கட்சியின் யாப்பிற்கு அமைய அவரின் உறுப்புரிமையையும் இரத்துச் செய்தது.

இதன் மூலம் அகில இலங்கை தமிழக் காங்கிரஸ் கட்சிக்கும் அப்பாத்துரை விநாயகமூர்த்திக்கும் இனிவரும் காலத்தில் எதுவித தொடர்பும் இல்லை.

அத்துடன் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் இடைக்காலத் தலைவராக வின்சன் டிப் போல் தெரிவாகியுள்ளார் என அக்கட்சியின் பொதுச்செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் குறிப்பிட்டார். (ச-5)


## தெருவெளி அரங்கக் கலைஞர்களுக்கு

மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் தெருவெளி அரங்காற்றுகைக்காக திறமையும் ஆர்வமும் உள்ள கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

- நடிகர்கள்
- பாடகர்கள்
- வாத்தியக் கலைஞர்கள்
- ஒப்பனையாளர்

ஒப்பந்த வேதன அடிப்படையில் பணியாற்றும் வாய்ப்பு.

03.03.2010 புதன்கிழமை 9.00 மணிக்கு நேரில் சமூகம் தரவும்.

இடம் - நாவலர் மண்டபம் தொடர்புகளுக்கு - 077 4602619

துளிகள் சமூக மேம்பாட்டு நிறுவனம்

(812)

## பணிநிலை வேண்டுகை

(யாழ்ப்பாணம் / வெளிமாவட்டம்)

- அச்சக மேற்பார்வையாளர் Supervisor
- வரவேற்பாளர் Receptionist
- நேரச்சு இயந்திர இயக்குனர் Offset Machine Minder (DAVIDSON 701D, KORD, KORS)
- கணனி தட்டெழுத்தாளர் Computer Typesetter
- கணனி பக்க வடிவமைப்பாளர் Graphics Designer
- அலுவலக பணியாளர் Office Boy
- கணக்கு இலிகிதர் Accounts Clerk

முன்னனுபவம் உள்ளவர்கள் மட்டும்

விண்ணப்பதாரிகள் மார்ச் 06,07 ஆம் திகதிகளில் நேரில் வரவும் காலை 10.00 - 4.30 வரை (ஞாயிறு 10.00 - 2.00)

கரிகணன் பிறிண்டேர்ஸ்,
இல:424, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.
(C-4526)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.03. 2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.